**தென் மாகாணம் - 2014**

தென் மாகாண சபையின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தென் மாகாண சபையின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துணைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 மாகாண சபை நிதியம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2015 ஏப்ரல் 15 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபை திரட்டு நிதி ரூபா 742,171,657 ஆகவிருந்ததுடன், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 26,759,195 ஆகவுமிருந்தது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதியம் ரூபா 715,412,462 ஆல் அதிகரித்திருந்தது.

**2.2.2 ஏனைய கணக்குகள்**

2015 மார்ச் 31 இல் உள்ளவாறான மீளாய்வாண்டின் மாகாண சபையின் ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுதலின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 20 | 06 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (iii) | மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 92 | 72 | 20 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 11 | 02 | 09 |
| (v) | நிதியக் கணக்குகள் | 06 | 03 | 03 |
| (vi) | சட்டவாக்கக் கணக்குகள் | 05 | - | 05 |
| | மொத்தம் | 141 | 98 | 43 |

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றுக்கமைய, ஆண்டிற்கான மிகை ரூபா 741,086,680 ஆகும். ஆனால், நிதி நிலைமைக் கூற்றில் இது ரூபா 715,412,462 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இதற்கமைய, ரூபா 25,674,218 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) குறுகிய கால முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நிலையான வைப்புகளது ஆரம்ப மீதியானது நிதியக் கூற்றின் பிரகாரம் ரூபா 102,528,712 ஆகிய போதும், பொதுப் பேரேட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 103,142,305 ஆகும். இதற்கமைய, நிதியக் கணக்கிற்கும் பேரேட்டிற்குமிடையே ரூபா 613,593 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கடற்றொழில், கலாசார, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

(i) கிங்கங்க ஆற்றுப்படுகையின் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ் 1500 கும்புக் கன்றுகளை நடுவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்குமென மதிப்பீட்டின் அடிப்படையில் பத்தேகம பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு 2014 டிசெம்பர் 22 ஆந் திகதியன்று ரூபா 100,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது முற்பணமாக இருந்த போதிலும் இறுதிக் கொடுப்பனவாக செலவின விடயம் 311-03-02-2005(02) இல் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) தலபத்கந்த நீர் ஊற்றுக்கு அண்மையில் குடிநீர் செயற்திட்டம் ஒன்றிற்கென அமைச்சினால் 2014 ஒக்டோபர் 29 ஆந் திகதியன்று ரூபா 3,728,000 பிரதிப் பிரதம செயலாளருக்குக் (பொறியியல் சேவைகள்) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது முற்பணமாகக் கணக்கிலிடப்படாது செலவின விடயம் 311-03-02-2005(02) இல் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கல்வித் திணைக்களம்

1995 முதல் 2007 வரை இடமாற்றம் பெற்று வந்த 79 ஆசிரியர்களது ரூபா 1,021,396 கடன் மீதிகளில் 75 கடன்கொடுத்தோர் பட்டோலை பெறுமதி ரூபா 972,739 நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த கடன் மீதியானது நிதிக் கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

**2.2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மூன்று நிறுவனங்களுடன் தொடர்புடைய 2 ஆண்டுகளைக் கடந்து விட்ட பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளின் பெறுமதி முறையே ரூபா 23,308,988 மற்றும் ரூபா 909,125 என்பனவாகும்.

(ஆ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் அமுலாக்கப்பட்ட புதிய வகைத் தேயிலைக் கன்றுகளது நாற்றுச் செயற்திட்டத்தின் மூலம் ஒரு நாற்றுப் பண்ணையாளருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் திருப்பிச் செலுத்தாது போன ரூபா 8,584,507 மற்றும் அதற்குரிய வட்டியாகிய ரூபா 5,687,260 மற்றும் திணைக்களக் கட்டணமாகிய ரூபா 5,930,442 என்பன அடங்கலாக 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 20,202,209 பெறப்பட வேண்டியிருந்தது. சபையானது அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது எவ்வித முறையான அங்கீகாரமும் இன்றி அவருக்குரிய 1 ஏக்கர் 25 பேர்ச்சஸ் காணி ஒன்றினை ரூபா 7,026,250 இற்கு சுவீகரித்திருந்தது. இக் காணியானது 2009 மார்ச் 24 ஆந் திகதியன்று நாற்றுப் பண்ணையாளரால் ரூபா 300,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இக் காணி 1998 டிசம்பர் 02 ஆம் திகதியன்று ரூபா 17,500 க்கும் 2001 பெப்ரவரி 25 ஆந் திகதியன்று ரூபா 50,000 க்கும் மாற்றம் செய்யப்பட்டும் 2013 மார்ச் 03 ஆந் திகதியன்று ரூபா 350,000 க்கு விற்பனை செய்யப்பட்டுமிருந்தது. 2014 ஒக்டோபர் 24 ஆந் திகதி அதனைப் பெற்றவரிடமிருந்து அதனை ரூபா 600,000 செலுத்தி அதிகாரசபை அதனைச் சுவீகரிக்காது அதற்குப் பதிலாக, நாற்றுப் பண்ணையாளரிடமே அதனை ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த கொடுக்கல்வாங்கல்களினை தொடர்ந்து 19 நாட்களின் பின்னர் அரச விலை மதிப்பீட்டாளர் ஒருவரது விலை மதிப்பீட்டு அறிக்கையின்றி தென் மாகாண வருமான ஆணையாளரது விலை மதிப்பீட்டு அடிப்படையில் அதனை ரூபா 7,076,250 க்கு அதிகார சபை சுவீகரித்திருந்தது. இதற்கமைய, இந்த காணிக்காக அதிகார சபை ரூபா 7,676,250 கொடுப்பனவு செய்திருந்தமையும் கணக்காய்வில் மேலும் புலனாகியது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஐந்து நிறுவனங்களுக்குரிய ரூபா 37,907,116 கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

--------------------------------------------------------------------------------

(i) 2015 ஜனவரி 02 ஆந் திகதிய SN/GL/B/SPRDA/தகவல்கள்/2014/01 (ii) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பின்வரும் சம்பவங்கள் தொடர்பாகக் கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

- விபத்திற்குள்ளான 52-8688 ஆம் இலக்க கெப் வண்டி
- அலுத்வெவ களஞ்சியத்தின் கையிருப்புக் குறைவு
- கைவிரல் அடையாள இயந்திரத்துடன் தொடர்புடைய கணனியில் நேர மாற்றம் செய்தல்
- 2010 செப்தெம்பர் 18 சனிக்கிழமை அன்று மேலதிக நேர வேலைக்காக அலுவலகத்தைத் திறந்துவைத்திருந்தமை.
- வெலிகம பிரதேச பொறியியலாளர் அலுவலகக் களஞ்சியத்தில் 3 தார்ப் பீப்பாய்கள் காணாமற் போனமை
- வெலிகத்தபன்தல வீதியில் முதலாவது கிலோ மீற்றர் தூரத்தில் பக்கச் சுவர்களையும் சப்பாத்துப் பாலத்தையும் நிர்மாணிக்கும் போது கூடுதலாகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை.

(ii) 2015 மார்ச் 31 ஆந் திகதிய SN/GL/B/தெ.மா.வீ.அ.அ.ச/தகவல்கள்/2014/01(iv) மற்றும் (vi) ஆம் இலக்கக் கடிதங்களின் மூலம் கோரப்பட்ட 2014 ஆம் ஆண்டின் போதான பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுத் தகவல்களும் வாகனப் பாவனை சம்பந்தமான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) 2015 ஜூன் 05 ஆந் திகதிய SN/GL/B/தெ.மா.வீ.அ.அ.ச/தகவல்கள்/2014/01(v) ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் கோரப்பட்ட பதவியணி தொடர்பான முழு தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) தென் மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க றுஹுணு சுற்றுலா பணியகச் சட்டவாக்கத்தின் 9(3) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களது அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றை உறுதி செய்வதற்குப் போதிய மற்றும் பொருத்தமான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 11 ஆந் திகதியளவிலும் மாத்தறை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 6 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன், அதற்கான அங்கீகாரம் மற்றும் பொருட்கள் முதலியவற்றைக் கையளிப்பது தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | 1996 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென்மாகாண கிராம அபிவிருத்திச் சட்டவாக்கம் | ரூபா | |
| | 17 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு ஆண்டிற்குமான நிதியத்தின் நிர்வாக அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கூடிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் முன்வைக்கப்பட வேண்டும் எனினும் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க றுஹுணு சுற்றுலாப் பணியாக அலுவலகச் சட்டவாக்கத்தின் II ஆம் பகுதியின் 9(i) ஆம் பிரிவு | - | இரு முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர்களும் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு உறுப்பினரும் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | - | |
| (i) | அத்தியாயம் II இன் பிரிவு 13.3 | - | றுஹுணு சுற்றுலாப் பணியகம் நிறுவப்பட்டு 10 ஆண்டுகள் கடந்து விட்ட போதும், ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படாமையால் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவிக்குத் தொடர்ந்து பதில் கடமையாற்றுபவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) | அத்தியாயம் IV இன் பிரிவு 5.1 | - | றுஹுணு சுற்றுலாப் பணியகத்திற்கு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சேர்க்கப்பட்ட 17 பேர் சேவையில் உறுதிப்படுத்தப்படாதிருந்தனர் |
| (iii) | அத்தியாயம் VII இன் பிரிவு 12.7 மற்றும் 2008 ஜுன் 28 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் 23,540 சுற்றறிக்கை | 23,540 | பதில் கடமையாற்றும் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றும் பதவிக்குரிய எரிபொருள் படியைப் பெறுவதற்கு பிரதம செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். எனினும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெறாது, தென் மாகாண காணி ஆணையாளர் பதவியில் பதில் கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு ரூபா 23,540 எரிபொருள் படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | அத்தியாயம் XIX இன் பிரிவு 6.1 | | குறித்தவொரு பதவிக்கென ஒதுக்கப்பட்ட மனையைத் தவிர ஏனைய சகல மனைகளுக்குமான குத்தகைக் காலம் 5 ஆண்டுகள் ஆகும். எனினும், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் 5 ஆண்டுகளுக்கு அதிகமாக உத்தியோகபூர்வ மனையில் குடியிருப்பது கணக்காய்வில் புலனாகியது. |
| (v) | அத்தியாயம் XXIV இன் பிரிவுகள் 4.4, 4.5 மற்றும் 4.6 | | மரணமுற்ற, சேவை நீங்கிய, மற்றும் இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தென் மாகாண சபையின் 18 நிறுவனங்களிலும் அவ்வாறு அறவிடப்படப்படாதிருந்த கடன் நிலுவை ரூபா 7,660,877 ஆகும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 | 420,000 | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுக் கணக்கிலுள்ள முற்பணம் ரூபா 20,000 மற்றும் அங்கத்தவர்களுக்கான நிதியேற்பாட்டுக் கணக்கிலுள்ள முற்பணம் ரூபா 400,000 என்பவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 (ஈ) | 1,879,500 | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் 3 வங்கிக் கணக்குகளினது ரூபா 27,750 பெறுமதியான 6 மாதங்களைக் கடந்துவிட்ட 3 காசோலைகளை வருமானத்திலிடுவதற்கான நடவடிக்கை |

எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 285 காசோலைகளுக்குரிய ரூபா 1,851,750 கூட்டுத்தொகையான பெறுமதியானது கணக்காளரின் அறிவுறுத்தல்களுக்கமைய 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2015 ஜுலை 21 ஆந் திகதியளவிலும் அக்காசோலைகள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை..

(iii) நிதிப்பிரமாணம் 485(4)

ஒரு திணைக்களத்திலிருந்து பிறிதொரு திணைக்களத்திற்கு உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றஞ் செய்யப்படுமிடத்து அவருடைய கடன் மீதியை அவர் மாற்றலாகிச் செல்லும் புதிய திணைக்களம் முன்னைய திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். எனினும், தென்மாகாணத்தில் உள்ள 20 நிறுவனங்களிலில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதியாக உள்ள ரூபா 156,674,767 தொடர்பில் அவ்வாறு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 571

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த வைப்புக்கள் வருமானத்திலிடப்பட வேண்டியிருந்த போதிலும், தென் மாகாணத்தின் 6 நிறுவனங்களது 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 82,060,143 தொகையான வைப்புகள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப்பிரமாணம் 1646

மாதாந்த ஓட்ட அட்டவணைகளது மூலப் பிரதிகள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் எனினும், தென் மாகாண கல்வி, காணி அமைச்சிற்குச் சொந்தமான 8 மோட்டார் வாகனங்களது 2014 ஆம் ஆண்டின் 96 மாதங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தன.

(vi) நிதிப்பிரமாணம் 1647(ஆ)

மோட்டார் வாகனங்கள் வருடாந்தம் பௌதீக செவ்வை பார்த்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் தென் மாகாணக் கல்வித் திணைக்களம் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தென் மாகாண சபையின் நிதி விதிகள்

---

(i) நிதி விதிகள் 54.4, 54.5 மற்றும் 54.6

வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தென் மாகாணத்தில் உள்ள 6 நிறுவனங்களின் 20 வாகனங்களுக்கு ஏற்பட்ட 22 விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 18,388,006 பெறுமதிக்கான 124 இழப்புகள் தொடர்பான பரீசீலனையை முடிவுறச் செய்து அறவீடுகளை மேற்கொள்ளவதற்கோ அல்லது

| | | | |
|---|---|---|---|
| | | | அவற்றைப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிசார் விதிகள் 113(1) மற்றும் (3) | | பெறப்படும் சகல பணத்திற்கும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டியபோதிலும், பின்வரும் சந்தர்ப்பங்களில் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>மாத்தறை மாவட்டத்தின் மஹா வித்தியாலயம் ஒன்றில் ஆரம்பப் பிரிவின் 10 மாணவர்களிடமிருந்து ரூபா 6,000 அறவிடப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்படாதிருந்ததுடன் அது வருமானத்திலிடப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மாத்தறை மாவட்ட மத்திய மஹா வித்தியாலயம் ஒன்றில் 2014 ஆம் ஆண்டில் 6 ஆம் ஆண்டுக்காக 150 மாணவர்களை சேர்த்துக் கொண்ட போது நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 90,000 மற்றும் மின்சாரத்திற்கெனப் பெறப்பட்ட ரூபா 150,000 தொடர்பாக பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை. |
| (iii) | நிதிசார் விதிகள் 169(1) மற்றும் 177 | 143,375 | கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் முறைப்படி சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் காலி மாவட்ட மகளிர் பாடசாலை ஒன்றில் ரூபா 143,375 க்கான 6 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் செலவினம் சான்றுறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிசார் விதி 261.2.1 | 82,591 | சில்லறைக் காசுக் கட்டுநிதி ரூபா 10,000 க்கு அதிகமாகத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான அங்கீகாரம் மாகாணத் திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டும். அவ்வாறல்லாது சொந்தப் பணத்தில் ரூபா 82,591 வரை பல்வேறு விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டதுடன் அது தென் மாகாண பிரதம செயலாளரது அலுவலக சில்லறைக்காசு கட்டுநிதி மூலம் மீளளிக்கப்பட்டிருந்தது. |
| (v) | நிதிசார் விதி 261.2.7 | | மாத்தறை வலயக் கல்வி அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டில் 6 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 127,800 கூட்டுத்தொகையுடைய, குறித்த வேலைகளுக்கென வழங்கப்படும் கட்டு நிதியானது குறித்த வேலை முடிவுற்றபோதும், 1 ½ மாதங்கள் முதல் 5 மாதங்கள் வரையிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (vi) | நிதி விதி 276 | 492,000 | வரையப்பட்ட காசோலைகள் உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டியபோதிலும் பல்வேறு கொடுப்பனவுகளுக்கென அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று வரையப்பட்ட ரூபா 492,000 பெறுமதியான 10 காசோலைகள் கணக்காய்வுத் தினமான 2015 |

| | | | |
|---|---|---|---|
| | | | பெப்ரவரி 10 ஆந் திகதியளவிலும் குறித்த நபர்களிடம் ஒப்படைக்கப்படாதிருந்தன. |
| (vii) | நிதிசார் விதி 471.1 | 415,625 | தென் மாகாண தலைமை அமைச்சினால் ''தக்ஷின ஜீவனி'' போட்டி வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்காக பெறப்பட்ட 475 அகராதிகளுக்கும் 2015 மே 26 அன்று ரூபா 415,625 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், அவை இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. |
| (ஊ) | சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை | | |
| (i) | 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சிஎஸ்ஏ/பீ/1/40 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | | ''அரச நிறுவனங்கள் தமது கூட்டங்கள் செயலமர்வுகள் கருத்துரைகளை நடாத்துவதற்காக ஹோட்டல்களைத் தெரிவு செய்யலாகாது. அத்துடன் உள்ளூர் சுற்றுலாக்களின் போது உணவு, பானங்கள் மற்றும் தங்குமிடம் என்பவற்றிற்கான ஹோட்டல் கொடுப்பனவுகளை அரச நிதியிலிருந்து தீர்த்து வைத்தல் ஆகாது'' எனக் குறிப்பிடப்பட்ட போதும், பின்வரும் சந்தர்ப்பங்களில் அதற்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br><br>➢ தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட 3 செயலமர்வுகளுக்கு ரூபா 597,295 மற்றும் போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 110,904 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>➢ தலைமை அமைச்சின் அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட செயலமர்வுக்கு தனியார் விழா மண்டபம் ஒன்றிற்கு ரூபா 351,450 மற்றும் மரண பரிசோதனைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மண்டபத்திற்கு ரூபா 95,000 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>➢ தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தால் நடாத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்டம் தொடர்பான அறிவூட்டும் செயலமர்வின் போது ஹோட்டல் ஒன்றிற்கு ரூபா 654,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2011 திசெம்பர் 19 ஆந் திகதிய பிசீஎம்டீ/1/4/23/4/4 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | | தென் மாகாண முதலமைச்சரது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 1 நிர்வாக உத்தியோகத்தர் பதவி, 10 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 6 சாரதிகளுக்கான பதவிகள், 2 சிற்றூழியர்களுக்கான பதவிகள் எனப் பதவியணியொன்று பணியிலமர்த்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2013 மார்ச் 01 ஆந் திகதிய எவ்சீ/பீஆர்&பீ/ஜீஎல்/2013 மற்றும் 2014 | 120,332 | ஒவ்வொரு விடயத்திற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துகையில் அவர்களுக்கு வளவாளருக்கான |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் 21 ஆந் திகதிய எவ்எல்/4/2014 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுச் சுற்றறிக்கை | | படியை வழங்க முடியாதிருந்த போதிலும், தென் மாகாண கல்வித் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக வளவாளர்களுக்கான படியாக ரூபா 120,332 கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. |
| (ஏ) | 2014 பெப்ரவரி 16 அந் திகதிய பீசீஈ/2014/03 ஆம் இலக்க தேர்தல் ஆணையாளரது சுற்றறிக்கை | | இச்சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 ஜனவரி 16 தொடக்கம் தென் மாகாண சபை தேர்தல்களை நடாத்தி முடிவுகளை வெளியிடும் வரை ஊழியர்களை ஆட்சேர்க்கலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதும், தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை 2014 ஜனவரி 16 ஆந் திகதியன்று 10 ஊழியர்களையும் 2014 ஜனவரி 31 ஆந் திகதியன்று ஒரு ஊழியரையும் ஆட்சேர்த்திருந்தது. |
| (ஐ) | திறைசேரிச் சுற்றறிக்கைகள் | | |
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை, 1998 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய 359 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் தென் மாகாண சபை நிதி விதிகள் 560 மற்றும் 561 என்பன | | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களையும் உள்ளடக்கிய நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் தென் மாகாண சபையின் 11 நிறுவனங்கள் தேவைப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகளைப் பேணாதிருந்தன. |
| (ii) | 2000 ஜனவரி 01 ஆந் திகதிய பிஎவ்/பிஈ/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை, 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய பீசீஎம்டீ/1/4/23/1/14 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை என்பன | 9,856,154 | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினதும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரமின்றி படி எதுவும் வழங்கப்பட முடியாது எனினும், தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒவ்வொரு நிரந்தர உத்தியோகத்தருக்கும் மாதாந்தம் ரூபா 2,500 இடைக்காலப்படி 2013 செப்தெம்பர் தொடக்கம் முறையான அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது. இதேவாறு, 2013 செப்தெம்பர் தொடக்கம் 2014 டிசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 9,856,154 வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,477,328 வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | | சுற்றறிக்கைப் பிரகாரம், கணணிகள் மற்றும் கணணித் துணைப் பாகங்கள், மென்பொருட்களிற்கான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டுமெனினும், பின்வரும் நிறுவனங்கள் அவ்வாறு கணணிகள் தொடர்பாக சொத்துப் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை<br>➢ தென் மாகாண கல்வித் திணைக்களம்<br>➢ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு<br>➢ தென் மாகாண கமத்தொழில், நீர்ப்பாசன கமநல அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு<br>➢ பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்)<br>➢ பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல் மற்றும் செயற்பாடு)<br>➢ தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை |

➢ தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| | | |
|---|---|---|
| (iv) | 2004 ஜுலை 29 ஆந் திகதிய 25 ஆம் இலக்கம், ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 25(i) ஆம் இலக்கம் ஆகஸ்ட் 13 ஆந் திகதிய 25(ii) ஆம் இலக்கம் மற்றும் நவம்பர் 30 ஆந் திகதிய 25(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | அரசாங்க முயற்சிகளுக்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்கையில் மாகாண திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். சகல முதலீடுகளும் அரசாங்க வங்கிகளின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயினும், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை முறையான அங்கீகாரமின்றி ரூபா 21,046,755 முதலீடு செய்திருந்ததுடன் அதில் ரூபா 10,285,901 தனியார் வங்கிகளில் முதலீடு செயய்ப்பட்டிருந்தது. |
| (v) | 2010 ஜனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2011 ஜனவரி 1 ஆந் திகதி தொடக்கம் சகல அரசாங்க முயற்சிகளும் நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிக்க வேண்டியபோதிலும் சமூக சேவைகள் நிதியத்தால் அந்நியமங்கள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஓ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| (i) | 1985 மே 10 ஆந் திகதிய 289 ஆம் இலக்கம் மற்றும் 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகள் | ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தவிர, சகல அரசாங்க வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட வேண்டியபோதிலும், தென் மாகாண சபையின் 6 நிறுவனங்களுககுரிய 13 மோட்டார் வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அரச வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரீசிலிக்கப்பட வேண்டியபோதிலும், தென் மாகாணத்தின் 14 நிறுவனங்களில் உள்ள 58 மோட்டார்வாகனங்கள் தொடர்பான எரிபொருள் நுகர்வு குறித்தவாறு பரீசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை |
| (iii) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2006 டிசெம்பர் 12 ஆந் திகதிய 13/2006 ஆம் இலக்க பிரதம செயலாளரின் (நிதி) சுற்றறிக்கை | வாகனப் பழுதுபார்த்தலுக்கான தொழில்நுட்ப அறிக்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரமே பெறப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக பெலியத்த தொழில் சார் பயிற்சி நிலையத்தின் மோட்டார் தொழில் நுட்ப பயிற்றுவிப்பாளரது அறிக்கையின் அடிப்படையில் கெப் வண்டி ஒன்றைப் பழுதுபார்ப்பதற்கு 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதியன்று ரூபா 65,354 வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம், பொருத்தமான ஒருவர் இல்லாதவிடத்து மாத்திரம் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியும். எனினும், தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ உதவியாளர் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் 59 பேர் நிறுவனத்தில் இருந்தபோதும் அங்கீகரிக்கப்படாத ‘‘சபைச் செயலாளர்’’ பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற முகாமைத்துவ |

உதவியாளர் தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவரை மாதாந்தம் ரூபா 25,000 வீதப்படி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்து 2014 யூன் வரை ரூபா 150,000 அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(v) 2008 மார்ச் 31 ஆந் திகதிய 08/2008 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 11.5 ஆம் பந்தி — 4,353,814 — சொத்துக் கடன் தொடர்பாக வங்கியால் அறவிடப்படும் வட்டி வீதத்திற்கும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படும் 4 சதவீத வட்டி வீதத்திற்குமே இடையேயான வித்தியாசத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனினும், உள்ளூராட்சி நிறுவனங்களினது நிதியத்தின் மூலம் செலவிடப்பட்ட ரூபா 4,353,814 வட்டியானது குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 2015 ஜுன் 01 வரை மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(ஓ) 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை — தென் மாகாணசபையின் அங்கத்தவர்களது பதவியணியில் பணியாற்றும் அரச சேவை அல்லாத நபர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதிய உதவு தொகையைச் செலுத்தாதிருந்தனர். முறைப்படி ஊழியர் சேமலாப நிதியத்தின் அல்லது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெறாது அந்நிதியங்களுக்கான உதவு தொகைகள் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டு நிறுவனத்தின் உதவு தொகையுடன் ஒரு சேர பொது வைப்பு கணக்கிற்கு அத்தொகை மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. இவ் வண்ணம் மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 12,639,444 பொது வைப்புக் கணக்கில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்ததுடன், தாமதமாக அங்கத்துவத்தைப் பெற்ற நபர்கள் உதவு தொகையுடன் ரூபா 100,845 தண்டப் பணமாகவும் செலுத்த வேண்டியிருந்தது. குறித்த ஊழியர்கள் நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்காமையால், அங்கத்துவத்தைப் பெறுவது தாமதமாகியதால் இத் தண்டப் பணமும் அவர்களிடமிருந்தே, அறவிடப்பட்டிருக்க வேண்டும். எனினும், பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட்ட உதவு தொகையைப் பயன்படுத்தி இத் தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) கல்வி அமைச்சின் சுற்றிக்கைகள்

---

(i) 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்கச் சுற்றிக்கையின் 1.9 ஆம் பந்தி — எப்பாடசாலையிலும் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாதிருக்கும் விதத்தில் ஆசிரியர்களது எண்ணிக்கை இணக்கஞ் செய்யப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக, மாத்தறை வலயத்திற்குரிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை 45 ஆகவும் மிகை 63 ஆகவும் இருந்தன.

| | | |
|---|---|---|
| (ii) | 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | ➢ பாடசாலை அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெற வேண்டுமெனினும், காலி மாவட்டத்தின் மஹா வித்தியாலயம் ஒன்றினது பாடசாலை அபிவிருத்திக் குழு 2014 ஆம் ஆண்டின் போதும் 2015 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலும் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.<br>➢ கொள்வனவுகள் முறையான கூறுவிலை கோரல்கள் மூலம் நடைபெற வேண்டுமெனினும், மாத்தறை மாவட்டத்திலுள்ள கனிஷ்ட வித்தியாலயம் ஒன்றில் 2 கழிவறைகளை நிர்மாணிப்பதற்காக கூறுவிலை கோரப்படாது ரூபா 86,887 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

(க) பிரதம செயலாளரின் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2014 ஜனவரி 24 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | றுஹுணு சுற்றுலா பணியகத்தில் ஊழியர் பிணை வைப்புச் செய்ய வேண்டிய 8 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2014 ஒக்டோபர் 15 ஆந் திகதிய 04/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் தென் மாகாண சபையின் நிதி விதிகள் 474 மற்றும் 476 | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அடுத்து வரும் ஆண்டின் மார்ச் 15 க்கு முன்னர் நடாத்தி அவ்வறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டிய போதும், தென் மாகாணத்தில் உள்ள 8 நிறுவனங்களில் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தன. |

| | | |
|---|---|---|
| (கா) | 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 04/10 ஆம் இலக்க வரி அறவீடு தொடர்பான காணி ஆணையாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கும் நிலுவைக் கட்டுப்பாட்டுக் கணக்கும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(கி) கொள்வனவு வழிகாட்டிக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | 2.5.1(இ) | கொள்வனவு அறிவிப்புக்களை பிரசுரித்தல், கூறுவிலை ஆவணங்களை வழங்குதல், கூறுவிலை கோரல்களை முடிவுறுத்தல், கூறுவிலைகளைத் திறத்தல் மற்றும் திகதிகளை தீர்மானித்தல் என்பன கொள்வனவுக் குழுவின் பொறுப்பும் கடமையும் ஆகும். எனினும் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரூபா 6.889,057 பெறுமதியான வாகனப் பழுதுபார்த்தல் மற்றும் மாவட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்களுக்குத் தேவையான கோவை பை (file bag) மற்றும் உணவு மாதிரி கிட் (food sample Kit) என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்குக் கொள்வனவுக் குழுவால் சகல கொள்வனவு நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | 2.11.3(அ) மற்றும் தென் மாகாண சபை நிதி விதி 436.1 | கொள்வனவுக் குழு ஆரம்பித்த நேரம் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டுமென்பதுடன் குறித்த மாதிரிப் படிவத்தில் அறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்வனவுக் |

கூட்டம் முடிவடைந்த உடனேயே குழு அங்கத்தவர்களது கையொப்பம் பெறப்படவும் வேண்டும். 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,557,489 பெறுமதியான 109 கொள்வனவுத் தீர்மானத்தின் போது கொள்வனவுக் குழு அங்கத்தவர்கள் எவருமே பங்குபற்றாததுடன் ரூபா 16,682,896 பெறுமதியான 121 கொள்வனவுத் தீர்மானங்கள் தொடர்பாக கொள்வனவுக் குழுவின் இரண்டாவது அங்கத்தவரும் ரூபா 753,379 பெறுமதியான 12 கொள்வனவுத் தீர்மானங்கள் தொடர்பாக கொள்வனவுக் குழுவின் இரண்டாம், மூன்றாம் அங்கத்தவர்களும் பங்குபற்றியிருக்கவில்லை..

### 2.2.7 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த தொகை ரூபா 117,582,228 ஆகும். இதன் பொருட்டு நிதி ஆணைக்குழுவினது அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஆ) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் வழங்கப்பட்ட கடன் பிணை முறிக் காப்புறுதியின் நிபந்தனையாக எந்தவொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்படும் கடன் பிணை முறிக் காப்புறுதியானது அவர் அரச சேவையிலிருந்து தானாக விலகும் பட்சத்தில் அல்லது பதவி விலகும்போது அல்லது சேவையிலிருந்து அகற்றப்படும் போது அத்தினத்தில் அமுலுக்கு வருமாறு காலாவதியாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியக் காப்புறுதியின் கீழ் எந்தவொரு பிணை மூலமும் பாதுகாப்பைப் பெறாத நிலையில் பின்வரும் நிறுவனங்கள் பெற்றுள்ள கடனை மீள அறவிடுவதானது ஆபத்தானதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| நிறுவனம் | உத்தியோகத்தரது எண்ணிக்கை | கடன் தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| ஆளுநர் செயலகம் | 12 | 1,421,650 |
| கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 01 | 152,150 |

(இ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

(i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் II ஆம் வகுப்புக்குரிய பதவியான பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு 2014 செப்டெம்பர் 02 ஆந் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றிய உத்தியோகத்தர் 1984 ஜனவரி 02 ஆந் திகதி அன்று மாவட்ட சேவை அடிப்படையின் கீழ் சான்றுறுதி பெற்ற ஆசிரியராக ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார் அரசியல் பழிவாங்கல்களுக்கான சிபார்சு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவால் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு உயர் சேவை

அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அந்நியமனத்திற்குரிய நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கமைய இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் நிரந்தர பதவியில் அமர்த்தப்படுவதானது அச்சேவைக்குரிய பிரமாணக் குறிப்பின்படி நடைபெறவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை கல்வி நிர்வாக சேவையுடன் தொடர்புடைய எந்தவொரு பதவிக்கும் இதன் மூலம் தாக்கம் ஏற்படலாகாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், அதற்கு முரணாக, 2005 ஏப்ரல் 5 முதல் இலங்கை கல்வி நிர்வாகச் சேவைப் பதவிகளுக்கு நிரந்தர மற்றும் பதில் அடிப்படையில் அங்கீகாரம் எதுவுமின்றி இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பென அவரது உத்தியோகபூர்வப் பதவி குறிக்கப்பட்டிருந்தது.

(ii) எல்பிட்டிய வலயக் கல்வி அலுவலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் திருத்தியமைக்கப்பட்ட பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை ரூபா 19,000,000 ஆக இருந்தது. ஆனால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுமதியுடன் அது ரூபா 532,847 தொகையால் இணங்கியிருக்கவில்லை.

(iii) தென் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 700 பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்த்தல்

---

- இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புக்கு முரணாக, பிரதேச செயலக மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு குறித்த பிரதேச செயலகப் பிரிவில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை பிரதேசத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு நிகராகவோ அல்லது, குறைவாகவிருப்பின், ஆசிரியர்களை போட்டிப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலமாக ஆட்சேர்ப்பதெனத் தீர்மானித்து அதற்கமைய புதினப் பத்திரிகை விளம்பரங்களில் தீர்மானம் வெளியிடப்பட்டிருந்தது.

- ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய, நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் குறித்த நியமன அதிகாரியால் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குப் பதிலாக எழுத்து மூல போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு முன்னர் 8830 எண்ணிக்கையிலான சகல விண்ணப்பதாரர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

- இதற்கமைய, 2008 டிசெம்பர் 22 ஆந் திகதிய 24/2008 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக, நேர்முகப் பரீட்சைக் குழுவின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக, எதுவித ஆவணச் சான்றுமின்றி, தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினது செயலாளருக்கு ரூபா 109,005 மற்றும் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 10,260 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றைவிட, 2015 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் ரூபா 98,745 க்கான உறுதிசீட்டு ஒன்றை அங்கீகரித்திருந்ததுடன் ஓய்வுபெற்ற உத்தியோகத்தருக்கு அதனை வழங்குவதற்குத் தயாராகியிருந்தமையும் புலனாகியது.

- ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதும், அதற்கான எழுத்துமூல அங்கீகாரம் எதனையும் பெற்றிருக்கவில்லை.

(ஈ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

---

(i) 2014 ஜுன் 17 ஆந் திகதிய தெமாச/பிப/திட்/அபி/07/1/14 ஆம் இலக்க தலைமை அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம், 2 செயற்திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி 2014 செப்டெம்பர் 01 ஆந் திகதியன்று மீளாய்வு செய்யப்பட்டிருந்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது மீளாய்வு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் அதிகமாக ரூபா 1,860,000 செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2014 ஜுன் 17 ஆந் திகதிய தெமாச/பிப/திட்/அபி/07/1/14 ஆம் இலக்க கடிதத்தில் முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் 2014 ஆம் ஆண்டிற்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் புதிய வேலைகளுக்காக ஏற்பாடு செய்த நிதியிலும் கூடுலாக 7 செயற்திட்டங்களுக்கு ரூபா 865,539 செலவிடப்பட்டிருந்தது.

(உ) மாத்தறை உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் மாவட்ட பொறியியலாளர் பதில் கடமையாற்றுவதற்கான முறையான நியமனக் கடிதமின்றி மாத்தறை நிர்மாண வேலைப் பொருட்கள் ஆய்வுகூடத்தின் பொறுப்பதிகாரியாகவும் மேற்பார்வை உத்தியோகத்தராகவும் பணியாற்றுவதற்கு மாத்தறை உள்ளுராட்சித் திணைக்களம் அவரது நிரந்தர பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத் தொகையை பதில் கடமையாற்றுவதற்கான படியாக 2011 டிசெம்பர் முதல் 2014 ஆகஸ்ட் வரை ரூபா 224,205 தொகையை கொடுப்பனவு செய்திருந்தது.

(ஊ) நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

---

(i) தென் மாகாண மகளிர் காப்பகத்தின் உள்ளே அமைந்துள்ள உசாத்துணைச் சேவை நிலையக் கட்டிடம் 2013 பெப்ரவரி 14 தொடக்கம் உத்தியோகபூர்வ மனை ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இள வயதுச் சிறுமிகளது உசாத்துணை நடவடிக்கைகளுக்கென அமைக்கப்பட்ட உசாத்துணை நிலையம் இவ்வண்ணம் உத்தியோகபூர்வ மனையாகப் பயன்படுத்தப்படுவதால் ஆலோசனை நிலையத்தை அமைப்பதன் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறாது போனமை அவதானிக்கப்பட்டது.

(ii) 1992 மார்ச் 19 ஆந் திகதிய சே/3/4/12 ஆம் இலக்க தென் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரின் கடிதத்திற்கமைய பகல்நேர பாதுகாப்பு நிலையங்களின் (குழந்தைகளுக்களுக்கான பூங்கா) சேவை நிலைமையினை உயர்த்துவதற்காக அவற்றைப் பராமரிப்பவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் மாதாந்தப் பராமரிப்புப் படி கொடுப்பனவு செய்யப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 368,800 ஊக்குவிப்புப் படி மற்றும் ரூபா 616,100

பரமரிப்புப் என்பன முன்பள்ளிப் பராமரிப்பாளர்களுக்கும் முன்பள்ளிகளுக்குமே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய கைத்தொழில், கிராம அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, பொருளாதார முன்னேற்றம், சமூக நலனோம்பல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள், மகளிர் விவகார, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் தனியான பிரிவாக இயங்கிய கிராம அபிவிருத்திப் பிரிவு திணைக்களமாக் கருதப்பட்டு அதற்கான பதவியணியை அங்கீகரித்தும் அவ்வாறாக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு பதில் கடமையாற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதும், திணைக்களம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவையான சட்டபூர்வ ஏற்பாடுகளைக் கடைப்பிடித்து அங்கீகாரம் பெறப்படுவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. சகல மதிப்பிற்குரிய ஆளுநர்களுக்கும் முகவரியிடப்பட்ட சனாதிபதியின் செயலாளரது 2014 ஜூலை 03 ஆந் திகதிய பீசீஎம்டி/1/2/23/4(ii) ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை ஒன்று திணைக்களத்தை நிறுவுவதாயின் 2013 ஒக்டோபர் 31 ஆந் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானித்தவாறான நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுவதுடன், இச் சந்தர்ப்பத்தில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஏ) தென் மாகாண கடற்றொழில், கலாசார, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.

--------------------------------------------------------------------------------------------------------------------

(i) இவ்வமைச்சினால் அமுலாக்கப்படும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மக்களுக்கு மீன் விற்பனைக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட 100 முச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 3 முச்சக்கர வண்டிகளில் ஒன்று பயணிகளுக்கான முச்சக்கர வண்டி என்றும் இதற்கென அமைச்சினால் ரூபா 10,000 வழங்கப்பட்டிருந்தமையும் தெரிய வந்தது.

(ii) கருவாடு தயாரிப்பிற்கான 50 போறனைகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு முன்னரே ரூபா 2,471,000 பெறுமதியான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குக் குறித்த வழங்குனருடன் 2014 டிசெம்பர் 24 ஆந் திகதியன்று உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) அம்பலாந்தோட்டை பிரதேச செயலகம்

-------------------------------------------------------------

வரைஞர்களது களப்பரிசோதனைகளுக்கான செலவினங்கள் பரீசீலனைக்குட்படுத்தப்பட்ட போது எதிர் காலத்திற்கான முன் நிகழ்ச்சித்திட்டமோ நடைபெற்ற வேலை நிகழ்ச்சித்திட்டமோ சமர்ப்பிக்கப்படாது, உத்தியோகத்தரது கடமைப்பட்டியலுக்கமைய முன்மொழியப்பட்ட செயற்திட்டத்திற்கான பகுதிகளை பரீசீலித்து தேவையான வடிவங்களை வரைவதற்கு மாத்திரமே களத்தில் பணியாற்றக்கூடிய வரைஞர்களால் 2014 ஆம் ஆண்டில் 225 ½ நாட்கள் செயற்திட்ட மேற்பார்வையிடல் தொடர்பான களக் கடமைகளில் ஈடுபட்டதற்காக பயணச் செலவினமாகவும் படியாகவும் ரூபா 149,729 பெறப்பட்டிருந்தது.

(ஓ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தென் மாகாண சபை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செலவு செய்வதற்காக தென் மாகாண கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 265,000 நிதிப் பிரமாணம் மற்றும் கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது பெலி அத்த பிரதேச செயலகத்தால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - அம்பாந்தோட்டை

---

2012 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டைத் தொகுதியில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு நோயாளர்களுக்கான கட்டில்களைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.2 (அ) வழிகாட்டிக்கமைய விலை விபரங்களை விரிவாகத் தயாரிக்காது கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் அதி குறைந்த கூறுவிலையான ஒரு நோயாளர் கட்டிலுக்கு ரூபா 11,875 எனக் கூறுவிலையைச் சமர்ப்பித்த தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதே பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதும், அதற்கு முரணாக கட்டிலொன்று ரூபா 27,500 படி பிறிதொரு நிறுவனத்திடமிருந்து 20 கட்டில்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 312,500 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஔ) பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடலும் செயற்பாடுகளும்) அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டிற்கான குறித்தொதுக்கிய அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 6 செயற்திட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 7,686,356 ஆகும். எனினும், ரூபா 10,438,432 செலவினம் ஏற்பட்டிருந்ததால் ரூபா 2,752,076 கூடுதலாகக் செலவிடப்பட்டிருந்தது.

(க) விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

---

(i) தென் மாகாண நிதி விதி 29 க்கு முரணாக செலவின விடயம் 316-3-2-2102 தொடர்பாக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் தளபாடங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 18,600,000 ஆகும். இதில் ரூபா 7,050,000 தென் மாகாண அமைச்சரவையின் 2014 டிசெம்பர் 31 ஆந் தகிதிய 689.5 ஆம் இலக்கத் தீர்மானத்திற்கு அமைய சம்பளமும் படியும், வாகனப் பழுதுபார்த்தல்கள், மோட்டார் வாகனங்களை வாடகைக்கமர்த்துதல், மேலதிக எரிபொருள் படிகள், கட்டிட பழுதுபார்த்தல்கள் மற்றும் கட்டிட நவீனமயப்படுத்தல் போன்ற மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. இவ்வமைச்சரவை தீர்மானத்திற்கு ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டில் கெக்கனதுர விவசாயப் பண்ணைக்கருகே நடாத்தப்பட்ட ''றுஹுணு அசிரிய'' எனும் விவசாயப் பண்ணைக் கண்காட்சியின் மூலம் பெறப்பட்ட டிக்கற் விற்பனை வருமானம் ரூபா 305,880 ஆகும். அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்குப் பயணச் செலவினமாக ரூபா 142,181 வழங்கப்பட்டு எஞ்சிய ரூபா 163,699 அரசாங்க வருவாயில் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதியன்று செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், வருமானத்தில் பயணச் செலவினம் வழங்குவதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(கா) தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்

---

(i) ரூபா 112,123 செலவில் 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதியன்று வக்வெல்ல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட 2015 வரவு, செலவுத் திட்ட அறிவுறுத்தல் செயலமர்வில் பங்குபற்றுவதற்கு அங்கீகாரம் பெற்ற 44 உத்தியோகத்தரில் நிறுவனத் தலைவர்கள் 5 பேரும் மற்றுமொரு உத்தியோகத்தரும் அடங்கலாக 6 பேர் கலந்து கொள்ளாததுடன் அங்கீகாரம் பெற்றிராத 34 நபர்கள் அதில் பங்குபற்றி கையெழுத்திட்டுமிருந்தனர்.

(ii) காலி மாநகர சபையின் முன்னாள் தலைவர் தொடர்பான விசாரனை உத்தியோத்தர்களது குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பரீசீலித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவினது செலவினமாகிய ரூபா 2,053,158 தொடர்பாக தென் மாகாண சபை அமைச்சரவையின் 576.4 மற்றும் 649.3 ஆம் இலக்கத் தீர்மானங்களின் கீழ் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும், அதற்கான ஆளுநரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(கி) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

---

(i) முறையான பதவி உயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்படாத நிலையில் மீளாய்வாண்டின்போது அதிகாரசபையின் சாரதிகள், தொழிலாளர்கள், சிற்றூழியர்கள் என 11 பதவிகளுக்குரிய 70 நபர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வுகளைப் பெற்றிருந்தனர்.

(ii) 2011 டிசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் 2012 ஜனவரி 01 முதல் இலங்கை பொறியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 15,000 படியாக வழங்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரசபை பொறியியலாளர்கள் இலங்கை பொறியியலாளர் சேவையைச் சேராதவர்கள் என்பதால் மேற்படி படியைப் பெறுவதற்கு அருகதையற்றவர்கள் ஆவர். அவ்வாறிருக்க, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் விசேட அங்கீகாரமின்றி பொறியியளாளர்களுக்கு 2014 ஜனவரி முதல் டிசெம்பர் வரை மாத்திரம் ரூபா 2,734,645 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தென் மாகாண பிரதம செயலாளர் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரால் பல சந்தர்ப்பங்களில் அங்கீகாரமற்ற இப்படியை வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் எனப் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், அவை எதனையும் பொருட்படுத்தாது தொடர்ச்சியாக இப்படி வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(கீ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

---

(i) குறித்தொதுக்கிய அடிப்படையிலான செயற்திட்டங்களின் கீழ் அதிகார சபையால் தென் மாகாண முன்பள்ளிச் சிறுவர்களுக்கென பிரசுரம் ஒன்றை வெளிப்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 600,000 என நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், 2013 மற்றும் 2014 ஆம் ஆணடுகளின் போது

முறையே ரூபா 5,109,685 மற்றும் ரூபா 2,100,000 செலவிடப்பட்டு ரூபா 5,609,685 மேலதிகச் செலவினம் ஏற்பட்டதற்கான அங்கீகாரம் 2015 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் பெறப்படாதிருந்தது.

(ii) இம்முன்பள்ளிச் சிறுவர்களுக்கான பிரசுரங்களை அச்சிடுவதற்கு கொள்வனவு வழிகாட்டி நடவடிக்கைகளுக்குப் புறம்பாகவும் கூறு கூறுவிலைகளைக் கோராமலும் அதிகார சபை செயற்பட்டதுடன் கொள்வனவு நடைமுறைக்குப் புறம்பாக நடந்து கொண்டமைக்கு எதுவித அங்கீகாரத்தையும் பெறவுமில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குரிய வங்கி நடைமுறைக் கணக்கிற்கு அங்கத்தவர்களின்வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 8,000,000, பொது நடைமுறைக் கணக்கிலிருந்து ரூபா 900,000 என்பன மாற்றஞ்செய்யப்பட்டிருந்ததுடன் இக் கட்டு நிதி மாற்றத்திற்கு முறையான எழுத்து மூல அங்கீகாரம் பெறப்படாது வாய் மூல அறிவுறுத்துரையே பெறப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் அவ்வாறாக மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 8,750,000 கட்டுநிதி மாற்றமானது மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

**3. வருமான முகாமைத்துவம்**

2010 முதல் 2014 வரையான வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் பின்வருமாறு

| ஆண்டு | வரி வருமானம் | வரி அல்லாத வருமானம் | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான வருமான அதிகரிப்பு / (குறைவு) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வரி வருமானம் | | வரி அல்லாத வருமானம் | |
| | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
| 2010 | 2,532 | 520 | 427 | 20.29 | 11 | 2.12 |
| 2011 | 3,705 | 570 | 1,173 | 46.33 | 50 | 9.62 |
| 2012 | 3,890 | 619 | 185 | 4.99 | 49 | 8.60 |
| 2013 | 4,039 | 717 | 149 | 3.83 | 98 | 15.83 |
| 2014 | 4,864 | 546 | 825 | 20.43 | (171) | (23.85) |

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவையாக உள்ள புரள்வு வரி

2014 ஜுன் 30 இல் உள்ளவாறான புரள்வுவரி நிலுவை ரூபா 63,044,914 ஆகும். புரள்வு வரி வருமானம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 3 ஆண்டுகளாகியும் நிலுவையாக இருக்கும் புரள்வு வரி நிலுவையை அறவிட முடியாதிருந்தது. நீதிமன்றத்தின் மூலம் அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தபோதும், நிலுவையாக உள்ள வருமானத்தை அறவிடுவது மந்தமாக

உள்ளதால் அவற்றை அறவிடுவது சந்தேகத்திற்குள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கனிப்பொருள் உரிமை மீதான வரி நிலுவை

2014 ஜுன் 30 இல் உள்ளவாறான கனிப்பொருள் உரிமை மீதான வரி நிலுவை மீதி ரூபா 10,456,481 ஆகும். அதில் ரூபா 7,040,269 ஆனது 2003 – 2006 காலப்பகுதிக்குரியதாகும்.

(இ) ஔடத மற்றும் இரசாயன வரி நிலுவை

2014 ஜுன் 30 இல் உள்ளவாறான ஔடத மற்றும் இரசாயன வரி நிலுவை மீதி ரூபா 1,197,948 ஆகும். 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 2001 முதல் 2013 வரையான காலப்பகுதிக்கான வரி நிலுவை மீதியில் 2014 முதல் அரையாண்டில் நூற்றுக்கு 1 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் நூற்றுக்கு 3.6 சதவீதம் வரி விலக்களிக்கப்பட்டுமிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 741,086,680 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 130,858,734 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| விடயம் | ஆண்டு 2014 | ஆண்டு 2013 | அதிகரிப்பு / (குறைவு) | |
|---|---|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | % |
| வருமானம் | 5,410,464 | 4,755,429 | 655,035 | 14 |
| செலவினம் | (22,515,066) | (19,458,243) | 3,056,823 | 16 |
| பற்றாக்குறை | (17,104,602) | (14,702,814) | 2,401,788 | 16 |
| அரச மானியம் | 17,845,688 | 14,833,673 | 3,012,015 | 20 |
| அரச மானியத்தின் பின்னரான மிகை | 741,086 | 130,859 | 610,227 | 466 |

(i) மீளாய்வாண்டில் வரி அல்லாத வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 170,719,971 ஆல் அல்லது 23.82 சதவீதத்தால் குறைவடைந்த போதும் மொத்த வருமானத்தின் 14 சதவீத அதிகரிப்புக்கு வரி வருமானத்தின் ரூபா 825,754,950 அல்லது 20.45 சதவீத அதிகரிப்பே காரணமாக இருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்தில் ரூபா 2,387,902,427 அல்லது 13.45 சதவீத அதிகரிப்பும்

மூலதனச் செலவினத்தில் ரூபா 673,651,298 அல்லது 39.94 சதவீத அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டன.

## 5. அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு

### 5.1 அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண சபையில் 5 அதிகார சபைகளும் 6 நிதியங்களும் இயங்கியவாறிருந்தன அவற்றினது 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தமை தொடர்பான விபரம் வருமாறு.

| | அதிகாரசபை / நிதியத்தின் பெயர் | நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த திகதி |
|---|---|---|
| | அதிகாரசபை | |
| (i) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 2015.08.28 |
| (ii) | தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | 2015.07.08 |
| (iii) | தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | கிடைக்கவில்லை |
| (iv) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை | 2015.07.17 |
| (v) | றுஹுணு சுற்றுலாப் பணியகம் | 2015.07.17 |
| | நிதியம் | |
| (i) | மாகாண வறுமை ஒழிப்பு நிதியம் | 2015.03.31 |
| (ii) | அவசரகால நிதியம் | 2015.03.31 |
| (iii) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் | 2015.08.19 |
| (iv) | சமூக சேவைகள் நிதியம் | 2015.03.30 |
| (v) | மாகாண விளையாட்டுத்துறை நிதியம் | 2015.04.21 |
| (vi) | கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள் நிதியம் | 2015.06.17 |

(ஆ) மாகாண வறுமை ஒழிப்பு நிதியம் மற்றும் கலாசார மற்றும் கலை நடவடிக்கை நிதியம் என்பவற்றினது நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் அவசர கால நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது.

## 5.2 வணிக முற்பணக் கணக்கு

(அ) பதினொறு வணிக முற்பணக் கணக்குகளது நிதி விளைவுகள் பின்வருமாறு

| விடய இலக்கம் | முற்பணக் கணக்கு நடவடிக்கை | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | | இலாபம் கற்பனைக் கட்டணம் நீங்கலாக | இலாபம் கற்பனைக் கட்டணம் அடங்கலாக | இலாபம் கற்பனைக் கட்டணம் நீங்கலாக | இலாபம் கற்பனைக் கட்டணம் அடங்கலாக |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30602 | தர ஆய்வுகூட முற்பணக் கணக்கு | 10,059,358 | 7,514,433 | 18,317,737 | 15,718,512 |
| 30702 | ஆயுர்வேத ஔடத உற்பத்தி முற்பணக் கணக்கு | 11,195,858 | 1,137,955 | 9,471,884 | 1,815,604 |
| 31402 | சான்றுறுதிப்படுத்திய விதை மற்றும் பயிர்செய்கைப் பொருள் முற்பணக் கணக்கு | 65,818 | - | 5,667 | - |
| 31403 | லபுதூவ விவசாயப்பண்ணை முற்பணக் கணக்கு | 3,431,680 | (15,158,745) | 6,360,920 | (11,941,953) |
| 31404 | போத்திவெல விவசாயப் பண்ணை முற்பணக் கணக்கு | (922,635) | (8,236,576) | (655,023) | (6,911,140) |
| 31405 | தெலிச்சவில விவசாயப்பண்னை முற்பணக் கணக்கு | (437,760) | (12,744,964) | 492,032 | (11,168,888) |
| 31602 | கெக்கணதுர கோழிப் பண்ணை பராமரிப்பு மற்றும் விதைக்காப்பக்தின் பராமரிப்பு முற்பணக் கணக்கு | 788,347 | (6,567,776) | 1,746,285 | (7,944,086) |
| 31603 | கெக்கணதுர பயிற்சி நிலையத்தின் பராமரிப்பு | 56,414 | (6,027,750) | 172,564 | (655,645) |
| 31902 | புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முற்பணக் கணக்கு | 12,020,633 | (134,990,505) | 6,602,741 | (129,672,617) |
| 32148 | வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையம் | 7,831,145 | 1,219,832 | 2,298,195 | (1,932,133) |
| 32149 | போகஹபெலஸ்ஸ விடுமுறை விடுதி மற்றும் பயிற்சி நிலையம் | (80,656) | (947,889) | (407,084) | (547,967) |

(ஆ) ஆயுர்வேத ஔடத உற்பத்தி முற்பணக் கணக்கு தொடர்பான மீளாய்வாண்டின் முடிவடைந்த மற்றும் முடிவடையாத ஆரம்பக் கையிருப்புகள் முறையே ரூபா 7,271,586 மற்றும் ரூபா 1,222,191 என்பனவாகும். அப் பெறுமதிகளை உற்பத்திக் கணக்கிலும் வர்த்தகக் கணக்கிலும் சீராக்கல் செய்கையில், முடிவடைந்தவற்றின் ஆரம்பக் கையிருப்பை முடிவடையானதனவாகவும் முடிவடையாதவற்றின் ஆரம்பக் கையிருப்பை முடிவடைந்தனவாகவும் கணக்கிலிடப்பட்டிருந்தது. அதற்கமைய, உற்பத்திக் கிரயம் ரூபா 6,049,395 ஆல் அதிகரிப்புக்குள்ளாகியது.

(இ) போகஹபெலஸ்ஸ விடுமுறை விடுதி மற்றும் பயிற்சி நிலையம்

----------------------------------------------------------------------------------------------------

(i) மீளாய்வாண்டின் இறுதியில் ஐந்தொகையில் காணப்படும் முன்னைய ஆண்டின் மூலதனம் மற்றும் பொறுப்புகளது கூட்டுத்தொகை ரூபா 35,339,241 ஆகும். எவ்வாறாயினும், அது ரூபா 34,544,544 ஆகக் காட்டப்பட்டதால் ரூபா 794,697 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) இந்நிலையமானது சுற்றுலா விடுதியாகவும் பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகள் நடாத்துவதற்கான பிரதான நோக்குடன் செயற்பட்ட போதும், மீளாய்வாண்டில் 2 செயலமர்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பயிற்சி செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளை நடாத்தியதன் மூலம் சம்பாதித்த தொகைகள் முறையே ரூபா 8,000 மற்றும் ரூபா 16,000 மாத்திரமே ஆகும்.

(ஈ) வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் முன்னைய ஆண்டிற்கான அட்டுறு வருமானம் ரூபா 493,653 ஆகும். இதனை மீளாய்வாண்டிலேனும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) லபுதூவ விவசாயப் பண்ணை முற்பணக் கணக்கு

--------------------------------------------------------------------------------

(i) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரமும் திறைசேரி கணணி அச்சுப் பிரதி அறிக்கையினதும் பிரகாரம் மீளாய்வாண்டின்போது செலவு வைக்கப்பட்டவற்றில் ரூபா 3,326,628 வித்தியாசமும் வரவு வைக்கப்பட்டவற்றில் ரூபா 1,580,701 வித்தியாசமும் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் ரூபா 1,745,929 வித்தியாசமும் அவதானிக்கப்பட்டன.

(ii) வர்த்தகக் கணக்கின் ஆரம்ப முடிவடைந்த பொருட் கையிருப்பு மீதியாக ரூபா 82,657 கருதப்பட்டபோதும், விற்பனைக் கூடத்தில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த இறைச்சி மற்றும் முட்டை, பேக்கரி மற்றும் பாலினால் ஆன உற்பத்திப் பொருட்களது பெறுமதி அடங்கலாக ரூபா 328,169 கையிருப்பானது 2013 ஆம் நிதியான்டினது இறுதிக் கையிருப்பில் சேர்த்துக்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முடிவடைந்திருந்த பொருட்களது கையிருப்பு அதேயளவு தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) வர்த்தகக் கணக்கில் இறுதிக் கையிருப்பாக இறைச்சி மற்றும் முட்டை, பேக்கரி மற்றும் பாலினாலான உற்பத்திப் பொருட்களது பெறுமதி ரூபா 32,300 ஆகக் காட்டப்பட்டபோதும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு

விற்பனைக் கூடங்களில் இருந்த ரூபா 209,193 பெறுமதியான எஞ்சிய கையிருப்பு இறுதிக் கையிருப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 ஆம் ஆண்டிற்கான சொத்து அறிக்கையின் பிரகாரம் விலங்கின உணவுகளது இறுதிக் கையிருப்பைக் காட்டும்போது, 6 வகை விலங்கின உணவுகளது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு மீதிகளது பெறுமதிக்கும் கணக்காய்வின்போது கணிக்கப்பட்டவாறான இறுதிக் கையிருப்பு மீதியினது பெறுமதிக்கும் இடையே ரூபா 338,730 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான விலங்கின உணவுப் பொருள் கையிருப்புப் பெறுமதி ரூபா 338,730 ஆல் குறைவாக மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(v) 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலும் பேரேட்டுக் கணக்குகளிலும் இழப்புக்கள் மற்றும் நட்டங்களின் பெறுமதி ரூபா 131,125 ஆக கணக்கிடப்பட்டிருந்த போதும், நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான அங்கீகாரம் ரூபா 758,431 தொகைக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது என்பதால் கணக்கிலிடப்படாத சேதமடைந்த உயிர்வாழ் கையிருப்புப் பெறுமதி ரூபா 627,306 ஆகும்.

(ஊ) தெலிச்சவில விவசாயப் பண்ணை முற்பணக் கணக்கு

-----------------------------------------------------------------------------------------

(i) 2014 ஆம் ஆண்டின் போது கமத்தொழில் திணைக்கள மூலதனச் செலவின விடயத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 259,240 பெறுமதியான 4 வகைச் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

(ii) பொருட் பதிவேடு மற்றும் பொறி இயந்திர கையிருப்பு மதிப்பீட்டு அறிக்கையில் ஆரம்ப கையிருப்பு ரூபா 2,739,795 ஆகும் எனினும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 2,841,334 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 101,539 வேறுபாடு அவதானிக்கப்பட்டது,

(iii) 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 220,647 இறுதிக் கையிருப்பானது 2014 ஜனவரி 01 ஆந் திகதிய ஆரம்பக் கையிருப்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 218,688 க்கான 7 கையிருப்பு மீதிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) கூட்டு மொத்தப் பெறுமதி ரூபா 287,031,824 ஆகவுள்ள 7 கணக்கீட்டு விடயங்களின் உரித்துறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை, மோட்டார் வாகனப் பதிவேடு, இழப்பு மற்றும் நட்டத்திற்கான பதிவேடு போன்ற சான்றுகள் இன்மையால் அவற்றை கணக்காய்வில் பரீசிலிக்க முடியவில்லை.

(எ) போத்திவெல விவசாயப் பண்ணை முற்பணக் கணக்கு

(i) ஆண்டின் போது பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 12,000,000 ஆகிய போதும் ஆண்டின் போதிலான உள்ளவாறான பெறுவனவுகள் ரூபா 9,372,640 ஆகியமையால் பெறுவனவுகளது ஆகக் குறைந்த எல்லை ரூபா 2,627,360 ஆல் அடைய முடியாது போனமை அவதானிக்கப்பட்டது.

(ii) கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 28,507,156 ஆகவுள்ள 4 கணக்கீட்டு விடயங்களின் உரித்துறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுறுதி போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் பரிசீலிக்க முடியவில்லை.

(ஏ) தர ஆய்வுகூடத்தின் முற்பணக் கணக்கு

(i) நிதிப்பிரமாணம் 500(4) க்கமைய முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான சகல மூலதனச் செலவுகளும் அவற்றிற்கென மதிப்பீட்டில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் மூலமே செலவிடப்பட வேண்டும் என்றும் அவற்றை முற்பணக்கணக்கில் வரவு வைக்கலாகாது எனவும் அறிவிக்கப்பட்டிருந்த போதும், மூலதன செலவினம் ரூபா 118,900 தர ஆய்வு கூடத்தின் முற்பணக் கணக்கு மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மாத்தறை மற்றும் காலி நிர்மாணத்துறை பொருள் ஆய்வு கூடங்களில் உள்ள நிலையான சொத்துக்கள் 2015 ஜுன் 01 மற்றும் 04 ஆந் திகதிகளில் நேரடிப் பரிசீலனைக்கு உட்படுத்திய போது ரூபா 404,058 பெறுமதியான 7 நிலையான சொத்துக்களும் பெறுமதி குறிப்பிடப்படாத ஒரு பொருளும் பழுதுபார்த்தலோ அல்லது கைதவிர்ப்போ மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை தெரிய வந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

(i) உடுகம வலயத்தில் 5 ஆசிரியர்களும் கல்விசாராப் பதவியணியைச் சேர்ந்த ஒருவரும் 1991 முதல் 2013 வரை சம்பளமற்ற 650 ½ நாள் விடுமுறைக்கு ரூபா 153,793 பெற்றிருந்ததுடன் அதில் பாடசாலைத் தொழிலாளி ஒருவரது 109 ½ நாள் சம்பளமற்ற விடுமுறைக்கு அவரிடமிருந்து ரூபா 70,263 அறவிடப்படாதுமிருந்தது.

(ii) கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் பொருட்டு அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சம்பள

மீளாய்வுக்குரிய சம்பள மாற்றங்கள் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாடு இன்மை காரணமாக 2015 ஜுலை 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த சம்பள நிலுவை ரூபா 1,212,431,682 ஆகவுமிருந்தது. இது தென் மாகாண கல்விச் சேவைப் பதவியணியினருக்கு இழைக்கப்பட்ட அநீதி எனவும் தென் மாகாண கல்விச் சேவையின் சிறப்பான மேம்பாட்டிற்கு பாதகமாக அமைவதாகவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வலயக்கல்வி அலுவலகம் - அம்பாந்தோட்டை

(i) தென் மாகாண கல்விச் செயலாளரின் 2013 மே 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆரம்ப விசாரணையின் போது தெரிய வந்த விடயங்களுக்கமைய, 4 ஆசிரியர்களை அவர்களுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக வலயத்தில் உள்ள வேறு பாடசாலைகளுக்கு மாற்றம் செய்து அதனை அவருக்கு அறிவிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விசாரனை தொடர்பான சிபார்சு வழங்கப்பட்டு 2 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் கணக்காய்வுத் தினமான 2015 ஜுன் 06 ஆந் திகதியளவிலும் குறித்த ஆசிரியர்களின் இடமாற்றத்தைச் செயற்படுத்தி அமுலாக்குவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அம்பாந்தோட்டை வலயக் கல்விப் பணிப்பாளரின் 2012 மார்ச் 21 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், இவ் வித்தியாலத்தின் அதிபர் உடனடியாக அமுலுக்கு வரும் பொருட்டு தேசிய பாடசாலை ஒன்றில் சேவையாற்றுவதற்கு இணைக்கப்பட்டிருந்தார். 2015 ஜுன் மாதம் கணக்காய்வு நடைபெறும் சந்தர்ப்பத்தில் 3 ஆண்டுகளும் 2 மாதங்களும் கடந்துவிட்ட போதும், இலங்கை அதிபர்கள் சேவையின் 1 ஆம் வகுப்பிலுள்ள இந்த ஆசிரியர் அந்தத் தேசிய பாடசாலையில் சாதாரண ஆசிரியராக பணியாற்றி வந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) காலி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி அதிகார எல்லைகளை வெவ்வேறாக்கி 2000 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் போது புதிதாக நிறுவப்பட்ட ஹிக்கடுவ நகர சபை, ரஜ்கம பிரதேச சபை, வெலிப்பிட்டிய திவிதுர பிரதேச சபை மற்றும் இமதூவ பிரதேச சபை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களும் பொறுப்புகளும் தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் சட்டப்படி ஒப்படைக்கப்படாமையால் சபைகளுக்கிடையே நிர்வாகச் சிக்கல்களும் வருமானச் சேகரிப்பு தொடர்பான சிக்கல்களும் ஏற்பட்டிருந்தன.

(ஈ) காணி ஆணையாளர் திணைக்களம்

(i) அரசாங்க காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்

- கணக்காய்வுத் தினமான 2015 ஜுன் 04 இல் உள்ளவாறான காணிக் கச்சேரிகளை நடாத்துதல் தொடர்பான செயன்முன்னேற்றத்தின் பிரகாரம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான இறுதி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் 1312 பயனாளிகள்

ஆவர். இவர்களில் 705 பயனாளிகளுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- அம்பாந்தோட்டை மாவட்ட காணி பயனாளிகளுக்கு 2015 ஜுன் 09 ஆந் திகதியளவில் எதுவித அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்படாதிருந்ததுடன் அம் மாவட்டத்தின் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்திற்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பயனாளிகளது பெயர்ப் பட்டியல் மாத்திரமே கிடைக்கக் கூடியதாக இருந்தது. அம்மாவட்டத்திற்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக வேறெந்த தகவல்களும் தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திடம் இருக்கவில்லை.

(ii) ரண்மலகந்த சுற்றுலா விடுதிப் பரிசோதனை

---------------------------------------------------------------------

திணைக்களத்திற்குச் சொந்தமான வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ரண்மலே வராபிடிய எனப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ள ரண்மலகந்த சுற்றுலா விடுதிக்கு அரச உத்தியோகத்தர்கள் அவ்வப்போது சமூகமளித்து அங்கு தங்குமிட வசதிகளைப் பயன்படுத்தியிருந்த போதும், கட்டணமெதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. பங்களா பொறுப்பாளருக்கு 2012 ஏப்ரல் தொடக்கம் 2015 ஜுன் வரை ரூபா 1,044,327 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த பங்களாவின் மின்சார செலவினம் (2013 முதல் 2015 ஏப்ரல் வரை) ரூபா 11,355 ஆகவுமிருந்தது. இவ்விதமாகத் திணைக்களம் சுற்றுலா விடுதிக்குச் செலவுகளை மேற்கொண்ட போதும், வருமானம் எதனையும் ஈட்டாததுடன் வருமானத்திற்கான வழியைக் காண்பதற்குத் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் தெரிய வந்தது.

(உ) எல்பிட்டிய பிரதேச செயலகத்தின் 4 குத்தகையாளரிடமிருந்து 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை ரூபா 391,578 ஆகும். அதில் 2 குத்தகையாளரிடமிருந்து குத்தகை நிலுவை 15 ஆண்டுகளைக் கடந்திருந்தன. மேலும், 147 வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாகவும் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,183,888 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) றுஹுணு சுற்றுலாப் பணியகத்தால் ரூபா 3,919,025 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தெனியாய சுற்றுலாத் தகவல் நிலையம் கொட்டபொல பிரதேச சபைக்குரியதாகும். எனினும், அதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

-----------------------------------------------------------------

பெந்தோட்டை ஜனகலா கேந்திரத்தில் அமைந்துள்ள 3 கட்டிடங்களைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 441,600 குத்தகைப் பணமானது 2 முதல் 16 மாதங்களாக அறவிடப்படாதிருந்ததுடன் அதனை அறவிடுவதற்குப் போதியளவு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஏ) 2014 ஒக்டோபரில் காலி மாவட்ட நீர்ப்பாசன அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த 2 ஸ்கெவேட்டர் இயந்திரங்கள் 2014 டிசெம்பர் 28 மற்றும் 2015 ஏப்ரல் 02 ஆகிய திகதிகளில் செயலற்றுப் போயிருந்தன. எனினும், அவ்விரு இயந்திர இயக்குனர்களுக்கும் உதவியாளர்களுக்கும் அவர்களிடமிருந்தும் சேவை எதுவும் பெறப்படாமலேயே சம்பளமாக 2015 ஜுலை வரையில் ரூபா 735,304 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, மாவட்ட நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கென தனியாரிடமிருந்து பெறப்பட்ட இயந்திரங்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,149,034 வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்ட நீர்ப்பாசன அலுவலகத்திற்குச் சொந்தமாக இயந்திரங்கள் உள்ள போதும் அவற்றால் பயன்பெற முடியாமை காரணமாக தனியார் துறைக்கு பெருமளவு அரசாங்க நிதி பெருமளவு செலவாகி இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஐ) நன்னடத்தை ஆணையாளர் அலுவலகம், றுஹுணு சிறுவர் இல்லம் மற்றும் ஏனைய சிறுவர் இல்லங்கள் அமைந்துள்ள காணிகளும் வளவுகளும் மத்திய அரசாங்க நன்னடத்தை திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டனவாகும். அவற்றை அரசாங்கத்திற்குரிய காணியாக மாற்றுவதற்கு காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38 (ஆ) உப விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை தெரிய வந்ததது.

(ஒ) அம்பாந்தோட்டை பிரதேச செயலகம்

---

(i) மூன்று தனியார் நிறுவனங்கள் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான மதுவரி அனுமதிப்பத்திரங்களை பெற்றிருக்கவில்லை.

(ii) லங்கா சோல்ட் லிமிட்டட்டின் மஹா உப்பளம் மற்றும் கொஹொலொங்கல உப்பளம் என்பவற்றினது குத்தகைக்காக 2012,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கென ரூபா 16,429,860 குத்தகை மற்றும் தண்டப் பணம் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது.

(ஓ) கல்வித் திணைக்களம் - மாத்தறை

---

(i) மாத்தறை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 10 மற்றும் 11 ஆம் தரங்களில் கல்வி கற்பிப்பதற்கென இரண்டாவது பகுதியினது தொழில்நுட்ப பாடங்கள் ஒன்பதில் இரண்டும், 6 முதல் 9 வரையான தரங்கலிற்கான விசேட பாடங்களில் ஒன்று மாத்திரமே கறிபிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, மாணவர்கள் தமக்குரிய பாடங்களைத் தெரிவு செய்வதற்கிருந்த சந்தர்ப்பங்களை இழந்திருந்தனர். இந்த வித்தியாலயத்தில் ஏறக்குறைய 150 மாணவர்கள் கல்வி கற்ற போதும், சுத்தமான குடி நீர் வசதி இன்மையால் மாணவர்களும் ஆசிரியர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர், அவ்வாறே மாணவர்களது பாவனைக்கென பாடசாலையில் ஒரு கணனியேனும் இருக்கவில்லை. கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 16 ஆந் திகதியளவிலும் கணனிகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிற கல்வி வலயங்களிலிருந்து மாத்தறை கல்வி வலயங்களுக்கு 2006 முதல் 2013 வரை இடமாற்றம் பெற்று வந்த 12 ஆசிரியர்களது பெயர் வழிக் கோவைகளை இடமாற்றம் பெற்ற வலயத்திற்கு 2015 ஆம்

ஆண்டளவிலும் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாத்தறை மாவட்ட பாடசாலை ஒன்றிற்குச் சொந்தமான 4 ஏக்கர் 2 றூட் 26 பேர்சஸ் பாடசாலைக் காணியில் எல்லைச் சுவர்கள் எதுவும் இருக்கவில்லை. பாடசாலைக் காணியைச் சூழவுள்ள கிராமவாசிகள் பாடசாலை காணியின் பகுதியை ஆக்கிரத்திருந்தமை கணக்காய்வின்போது தெரிய வந்தது.

(ஔ) பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - மாத்தறை

---

2012 ஆம் ஆண்டில் தெய்யந்தர வைத்தியசாலைக் காணியில் சிகிச்சைகளுக்கான கட்டிடமொன்றை நிர்மாணிக்கத் தொடங்கியிருந்ததுடன் 2015 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கட்டிடத்தின் நிர்மாண வேலை நிறுத்தப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தை நிர்மாணிக்கையில் ஒப்பந்தகாரர் வைத்தியசாலை நீரைப் பயன்படுத்தியதால் அதன் பொருட்டு ரூபா 122,272 அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 மார்ச் 31 வரை அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(க) தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சபை

---

(i) அதிகார சபைக்குரிய பஸ் தரிப்பிடங்களில் உள்ள 24 கடைகளது உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தபோதும், அது தொடர்பாக முகாமைத்துவம் கவனஞ் செலுத்தாதிருந்தது.

(ii) 2015 மார்ச் மாதக் கணக்காய்வின் போது வந்துரம்ப பஸ் தரிப்பிடத்தில் உள்ள 4 கடைகள் மற்றும் ஊரகஸ்மன்ஹன்திய பஸ் தரிப்பிடத்தில் 2 கலைகள் என்பன 3 மாதங்களாக வியாபார நடவடிக்கைகள் இன்றி தொடர்ந்து மூடப்பட்டிருந்தன. உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) பிரதம செயலாளர் செயலகம்

---

(i) தென் மாகாண சபை நிதி விதி 261.2.4 இற்கமைய வழங்கப்பட்ட கட்டுநிதி குறித்த தேவை முடிவடைந்தவுடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியபோதும், அவ்வாறாக முற்பணத்தைத் தீர்த்து வைக்காது 12 முதல் 94 நாட்களாக பணம் கையிலிருப்பதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

(ii) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் 6 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரீசிலிக்கப்பட வேண்டியபோதும், அவ்வாறாக எரிபொருள் பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை. 2014 டிசெம்பர் 5 ஆந் திகதிய (சிஎஸ்எஸ்/3/11/10 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பிரதம செயலாளரது அலுவலகம் கொண்டிருந்த 14 குழாம் வாகனங்களினதும் எரிபொருள் பரீசீலனையை மேற்கொண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உதவிப் பணிப்பாளர் ஒருவரது உதவியுடனான குழு ஒன்றை நியமித்திருந்தபோதும், 2015 ஆகஸ்ட் 27 வரை அந்த நடவடிக்கை முடிவடைந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

(கி) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

----------------------------------------------------------------------

(i) மாகாண அமைச்சரவைக் கூட்டத் தீர்மானம் ஒன்றிற்கமைய குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கான வீடமைப்பு உதவி வைத்திய உதவி மாணவருக்கான உதவி, சுய வேலை வாய்ப்பு உதவி, விளையாட்டுச் சங்கங்கள், அறநெறிப் பாடசாலைகள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கான உதவி தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மாகாண சபையின் மதிப்பிற்குரிய அங்கத்தவர்களினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதன் பொருட்டு பிரதம செயலாளரது அலுவலக செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 38 மில்லியனை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வமைச்சரவைத் தீர்மானத்தை தென் மாகாண ஆளுநர் அங்கீகரித்தமையை உறுதிப்படுத்துவதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், இவ்வாறான நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டதற்கான சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், குறித்தொதுக்கப்பட்ட அடிப்படையிலான நிதியேற்பாடு மற்றும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் பிரதம செயலாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டிருந்த கட்டு நிதியைப் பயன்படுத்தி அரசாங்கக் கட்சியின் ஒரு அங்கத்தவர் மாத்திரம் ரூபா 10 இலட்சம் வீதம் பெற்றுக் கொள்ளும் விதத்தில் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- இவ்வாறான செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு பிரதம செயலாளர் அல்லது பிரதிப் பிரதம செயலாளரின் (திட்டமிடலும் செயற்பாடும்) அங்கீகாரம் பெறப்படாத நிலையில் இச் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது.

- அங்கத்தவர்களிற்கு பணத்தை வழங்கியிருந்தமை உறுதிப்படுத்தி பயனாளிகளது கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலுக்மைய, 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் காசோலைகள் வரையப்பட்டு அக் காசோலைகள் குறித்த அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் காசோலைகள் 2014 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பயனாளிகளுக்கிடையே வழங்கப்பட்டிருந்தன.

- உதவி வழங்கப்படுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட நபர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்கள் என்பதைக் கிராம உத்தியோகத்தரோ அல்லது பிரதேச செயலாளரோ சான்றுறுதிப்படுத்தாதிருந்தும் இவ்வுதவி வழங்கப்பட்டிருந்தது.

- இச் செயற்திட்டத்தின் கீழ் கூறுவிலைகளைக் கோராது பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்கு 2014 ஜனவரியில் ரூபா 14,997,748 மற்றும் ஏப்ரலில் ரூபா 798,340 என ரூபா 15,796,088 பிலியந்தலையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன்போது பிளாஸ்டிக் நாற்காலிகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட ரூபா 596,088 கூடுதலாக வழங்கப்பட்டுமிருந்தது.

(ii) காலி மாவட்டத்தில் 47 செயற்திட்டங்களும், மாத்தறை மாவட்டத்தில் 14 செயற்திட்டங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 7 செயற்திட்டங்களும் அமுலாக்கப்படுவதற்காக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 3,462,417 கூட்டுத்தொகையானது செயற்திட்டம் அமுலாக்கப்படுவது தாமதமாகியதாலும் குறித்த மாகாண சபை அங்கத்தவர்கள் 7 ஆம் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படாமையாலும் 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியன்று தலைமைச் செயலாளருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(கீ) காலி வலயத்தில் முற்பணக் கணக்கின் தனிநபர் மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பிலே ‘‘ஏனைய’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 9,402,800 மீதியை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி திணைக்களம்

மோட்டார் சைக்கிள்களுக்கான கடனைப் பெற்று பதவி நீங்கிய / மரணமடைந்த 12 உள்ளூராட்சி அங்கத்தவர்களிடமிருந்து 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 360,490 கடன் மீதியைக் குறித்த பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி ஆணையாளர் திணைக்களம்

திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வரும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களது வருடாந்த வரி, பயிர்களுக்கான வரி, நெடுங்கால் வரி, கொள்வனவு விலை அறவீடு தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்ட வரி ரூபா 24,007,266 எய்தப் பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. மேற்படி வரிகளுள் நெடுங்கால வரியை அறவிடுவதானது மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்தது.

## 6.3 மாகாண வீதி அபிவிருத்தியும் திருத்தங்களும்

### தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வேஹெல்ல – மாபரண வீதியை விரிவடையச் செய்வதற்கு ஜெசிபி இயந்திரம் ஒன்று வாடகை அடிப்படையில் பெற்றமை தொடர்பாக அது சேவையில் ஈடுபடுத்தப்பட்டமையைக் குறிக்கும் திக்வெல்ல பிரதேச சபைத் தலைவரது கடிதத்தின் அடிப்படையில் செலவிடப்பட்ட மணித்தியாலக் கணக்கும் மணித்தியாலமொன்றிற்கான கொடுப்பனவு வீதமும் பரீசீலிக்கப்படாது ரூபா 469,350 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேசத்துக்கு மகுடம் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் 9 வீதிகளுக்கு ஏபீசீ கலவைக் கற்கள் மற்றும் C1 கற்கள் வழங்கும் ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கைகள் எதுவும் செய்யப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2015 தேசத்துக்கு மகுடம் கண்காட்சிகளுக்கான நுழைவுப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டவாறிருந்த 7 வீதிகளின் திருத்தங்களிற்காக ஏபீசீ வழங்குவதற்கு ரூபா 38,371,237 கொடுப்பனவு செய்யப்பட்ட 14 விலைப்பட்டியல்கள் தெரிவுச் செவ்வைக்குள்ளான போது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வழங்குநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனைப் பிரகாரம் அளவைகளைப் பெறாது வீதிகளுக்கு நேரடியாகவே ஏபீசீயை பயன்படுத்தியிருந்தனர். வழங்குநர்களது டிப்பர் வாகனம் எத்தனை தடவைகள் வந்து போயின எனும் அடிப்படையிலும் குறித்த டிப்பர் வாகனங்களது நியம கொள்ளளவு அடிப்படையிலும் வழங்கப்பட்டவற்றிற்கான அளவு கருத்திற் கொள்ளப்பட்டு ஏபீசீ வழங்கல் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ii) ஏபீசீ வீதிகளுக்கு வழங்குநர்களாலேயே நியமிக்கப்பட்டிருந்த வேலைப் பரிசோதகர்களால் டிப்பர் வாகன இலக்கம், விநியோகக் குறிப்பு இலக்கம், டிப்பர் வாகனத்தின் நியமக் கொள்ளளவு என்பன குறித்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிழையற்ற தன்மையை மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவர் பரீசீலிக்கும் விதத்தில் முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) வழங்குநர்களால் வழங்கப்பட்டிருந்த ஏபீசீ கலவையின் பொருத்தமான தன்மை தொடர்பான ஆய்வுகூட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் வழங்கப்பட்டிருந்த ஏபீசீ கலவையின் பொருத்தமான தன்மை தொடர்பாக கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது.

(iv) வீதிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த வேலை மேற்பார்வையாளரிடமிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில், உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட ஏபிசீ அளவினை நிச்சயப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்ததுடன் இதற்கெனப் பேணப்பட்ட பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பதிவுகள் இடப்படாதுமிருந்தது.

(v) செவ்வை பார்ப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் பிரகாரம் ரூபா 29,652,237 பெறுமதியான 9 விலைப்பட்டியல்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கியிருந்த வழங்குநர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, மேற்படி 7 வீதிகளது அபிவிருத்திக்குமாக வழங்கப்பட்ட ஏபீசீக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியில் 77.3 சதவீதமானவை வழங்குநர்களுடனான உடன்படிக்கை இன்றியே வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேசத்துக்கு மகுடம் நுழைவுப் பாதை அபிவிருத்திக்கான செயற்திட்டத்திற்கு வாடகை அடிப்படையில் ஜெசிபீ இயந்திரத்தைப் பெறுதல்

---

(i) 2015 மார்ச் 04 ஆந் திகதியன்று கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட வேளையில் ஜெசிபீ இயந்திர வழங்குனர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தகவல்களின் பிரகாரம், 20 ஜெசீபீ இயந்திரங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்த போதும், அதில் 3 ஜெசிபீ இயந்திரங்களுக்கான உடன்படிக்கைகள் மாத்திரமே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பொது முகாமையாளரால் செயற்திட்டப் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்ட 3 கடிதங்களின் மூலம் 2015 தேசத்துக்கு மகுடம் நுழைவுப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக மோட்டார் வாகனங்களையும் இயந்திர சாதனங்களையும் பயன்படுத்துகையில் அவை பயன்படுத்தப்பட்ட மற்றும் வேலை முடிவுற்ற அடிப்படையில் அவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அவ்வாறு நடைபெற்றமைக்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) இச்செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய ஜெசிபீ இயந்திரங்களுக்குள் ஒரு இயந்திரத்தினது ஓட்ட அட்டவணைகள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஓட்ட அட்டவணைகளில் உள்ளடங்கிய சில விடயங்கள் உண்மை அல்ல எனக் கணக்காய்வில் தென்பட்டதால் 20 ஜெசிபீ இயந்திரங்களுக்கு 2015 பெப்ரவரி 22 ஆந் திகதியளவில் 49 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17,796,216 சம்பந்தமாகக் கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

(உ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் செயற்பட்ட மாகாண வீதிகள் மற்றும் முடிவடையாத வீதிகளது அபிவிருத்தி செயற்திட்டம்- மாத்தறை

---

(i) இந்த வீதிச் செயற்திட்டத்திற்கான இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மூலப் பொருட்களை வழங்கும்போது மாகாண அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை எடுக்க வேண்டிய கேள்விகளுக்கான தீர்மானம் என்பன மாகாண அமைச்சின் கேள்விச் சபை மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிய வந்தது. 2011 ஜுன் 28 ஆந் திகதி நடைபெற்ற மாகாண அமைச்சினது கேள்விச் சபைக் கூட்டத்தில் 3 அங்கத்தவர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். பிரதம செயலாளர் அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர் இக் கேள்வியை அங்கீகரித்திருக்கவில்லை.

(ii) அவசரத் தேவை எனக் குறிப்பிட்டு ஆரம்பச் சந்தர்ப்பத்தில் முறையான அங்கீகாரமின்றி மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரல் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் வழங்குநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நடைபெற்றவாறிருக்கையில், திறந்த கூறுவிலைகளை கோருவது சாத்தியமானதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாது மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலைகளை கோருவதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் போது, அதி குறைந்த கூறு விலைகளின் கீழ் வழங்கலை மேற்கொண்டிருந்த தனியார் கம்பனியிடமிருந்து கூறு விலைகள் கோரப்படாதிருந்தன.

(iii) 2011 ஒக்டோபர் 03 ஆந் திகதியன்று திறக்கப்பட்ட கூறுவிலைகளுக்குரிய இரண்டாவது பிரதி நிறுவனத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டுமெனினும், இந்த இரண்டாவது பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, பெறப்பட்ட சில கூறு விலைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்கள் பின்னர் மேற்கொள்ளப்பட்டனவாக இருக்கலாம் எனும் சந்தேகம் கணக்காய்வில் எழாமல் இல்லை.

(iv) இரண்டாவது தடவையாகக் கேள்வியைக் கோரும் போது, தேவைப்படும் ஏபீசீயின் அளவு அல்லது ஒவ்வொரு வீதிக்கும் தேவையான ஏபீசீயின் அளவு குறிப்பிடப்படாமல் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. இதன்போது, நாளொன்றிற்கு வழங்கப்பட வேண்டிய ஏபீசீயின் அளவு 500 மீட்டர் கியூப் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது அமைச்சினது கேள்விச் சபை வரம்பு மீறப்படுவதை மறைப்பதற்கான நோக்குடன் செய்யப்பட்டதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) இச்செயற்திட்ட நடவடிக்கைகளது கோவைகள் எதுவுமே முறையாகப் பேணப்படவில்லை. வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட்டு, கொடுப்பனவுக் கிளைக்குச் செவ்வை பார்ப்பதன் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவேடுகளில் பதியப்பட்டிருந்த விலைப்பட்டியல் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் என்பன கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

(vi) 2015 மார்ச் 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்ட செயற்திட்டத்தின் முழு விபரமும் கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

### 6.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சபை நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தெரிவுச் செவ்வையின்போது தெரிய வந்த அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையினது 54.4(1)ஆம் பிரிவிற்கமைய நிர்மாண மற்றும் சேவை ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுப் பிணை முறிகளைச் சமர்ப்பிக்குமிடத்து ஒப்பந்தத் தொகையில் ஆகக் கூடியது 20 சதவீத முற்பணம் வழங்கப்படலாமெனினும், ஆளுநரது செயலகத்தின் 2014 டிசெம்பர் 08 ஆந் திகதிய எச்ஏ 5895 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் பழுதுபார்த்தல் தொடர்பான கொடுப்பனவுகளை வழங்குகையில் கொடுப்பனவுப் பிணை முறிகள் எதுவுமின்றி மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 386,024 இன் 62 சதவீதமான, அதாவது ரூபா 237,975 முற்பணமாக மோட்டார் வாகன முகவர் நிலையத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.13 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்படி பழுதுபார்த்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட விலைகளது நியாயபூர்வத் தன்மை தொடர்பாக தகைமை வாய்ந்த இயந்திரப்

பொறியியலாளர் ஒருவரது அறிக்கையைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கமத்தொழில் அமைச்சின் முன்னாள் அமைச்சருக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 289,710 பெறுமதியான பொருட்கள் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டதையடுத்து அவரது பதவிக்காலம் முடிவுற்றதன் பின்னர் ஒப்படைக்கப்பட்ட வேண்டுமெனினும், 2015 பெப்ரவரி மாதத்தில கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை அவை ஒப்படைக்கப்படாதிருந்தன.

(இ) கமத்தொழில், நீர்ப்பாசனம், கமநல சேவை அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

---

அமைச்சின் வியாபாரப் பெயர் விடய நடவடிக்கைகள் மற்றும் அந் நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு விநியோகிப்பதற்காக 48 கணனிகளும் 48 அச்சிடல் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2014 நவம்பர் 26 ஆந் திகதியன்று 8 நிறுவனங்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் குறித்த பொருட்கள் இரண்டு வாரங்களுக்குள் வழங்கப்பட வேண்டும் எனும் மூல நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாகக் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(i) மாகாண நிதி விதி 422(6) மற்றும் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 இன் 2.14.1(3) ஆம் பிரிவுக்கமைய ரூபா 2 மில்லியன் பெறுமதிக்கு குறைவான பொருட் கொள்வனவுக்கு மாத்திரமே அமைச்சின் பொருட்கொள்வனவுக் குழு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரித்துள்ள போதும், அதற்கு முரணாக, கூறு விலைக் கோரல் நடைமுறையைப் பயன்படுத்தி ரூபா 3,525,600 பெறுமதிக்குக் கொள்வனவு மேற்கொள்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.5 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது அங்கத்தவர்களுள் குறைந்தது ஒருவரேனும் குறித்த விடயத்தில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டுமெனினும், மேற்படி கொள்வனவிற்கென நியமிக்கப்பட்ட குழுவில் அவ்வாறான தகைமை பெற்ற அங்கத்தவர் ஒருவர் இருக்கவில்லை.

(iii) விசேட விடயங்களின் கீழ் கேள்வி அறிவித்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு, 2 வாரங்களுக்குள் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கமைய 2014 டிசெம்பர் 23 ஆந் திகதியளவில் 48 கணனிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி களஞ்சியம் கணக்காய்விற்குச் உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்திலும் 27 கணனிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(iv) அமைச்சிற்குச் சகல கணனிகளும் கிடைக்காத போதும், நிதிப் பிரமாணங்கள் 215(1) மற்றும் (1) (அ) என்பவற்றிற்கு முரணாக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 3,525,600 பெறுமதியான காசோலை வரையப்பட்டு அது வழங்கப்படாது வைத்திருக்கப்பட்டிருந்தது.

(v) அமைச்சு மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்காததுடன் வழங்குநாகளைப் பதிவு செய்திருக்கவுமில்லை.

(ஈ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

---------------------------------------------------------------

(i) தென் மாகாண கல்வித் திணைக்களத்தால் தென் மாகாணப் பாடசாலைகளுக்கிடையேயான சங்கீத போட்டிகளில் வெற்றி பெற்றவகளுக்குப் பரிசளிப்பதற்காக 2450 சான்றிதழ்களை அச்சிடுவதற்கென 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 64,925 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2014 மே 31 மற்றும் ஜுன் 01 ஆந் திகதிகளில் நடைபெற்ற குறித்த போட்டிகள் தொடர்பாக 2015 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தென் மாகாண கல்வித் திணைக்களம் 2013 ‘‘சிப்தொர அபிசெஸ்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விருது வழங்குவதற்கொன பெயர் பொறிக்கப்பட்ட கல் மற்றும் கிண்ணங்கள் வழங்குவதற்காக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 589,209 குறித்த பொருட்கள் களஞ்சியத்தை வந்தடையும் முன்பே கொடுப்பனவு செய்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் வைபவம் 2015 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் நடாத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) தென் மாகாண இளைஞர் நிலையம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக பத்தேகமவில் உள்ள வெக்குனுகொடவத்தயில் 16 ஏக்கர் காணியைச் சுவீகரித்தலும் நட்ட ஈடு வழங்கலும் தொடர்பாக 2001 மார்ச் 03 ஆந் திகதியன்று பத்தேகம பிரதேச செயலகததிற்கு தென் மாகாண விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 800,000 பெறுமதியான காசோலை குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படாது மாகாண சபையின் பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) காலி கடவத்சத்தர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான எத்திலிகொட பிரதேசதத்தில் உள்ள நபர் ஒருவருக்கு 1995 ஜுன் 13 ஆந் திகதி முதல் 30 ஆண்டு காலதததிற்கு விவசாய நோக்குடன் வழங்கப்பட்ட 0.0107 ஹெக்டயர் அரச காணியில் விவசாய அபிவிருத்தி எதுவும் நடைபெற்றிராததுடன் 4 ஆண்டுகளாக ரூபா 115,684 குத்தகை பணம் செலுத்தப்படாது நிலுவையாகவும் இருந்தது. அரச காணி ஒன்றினது குத்தகை உடன்படிக்கை மீறப்பட்டது தொடர்பாகத் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தன.

(எ) எல்பிட்டிய பிரதேச செயலகம்

-------------------------------------------------

காணி ஆணையாளர் திணைக்களத்தின் 2009 நவம்பர் 24 ஆந் திகதிய 4/10/24742 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம், விவசாய நடவடிக்கைகளுக்காக நபர் ஒருவருக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 0.009 ஹெக்டயர் காணி அவரால் எதுவித உடன்படிகையுமின்றி வேறு நபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக அவருக்கெதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய கைத்தொழில், கிராம அபிவிருத்தி, சுற்றுலா, பொருளாதார மேம்பாடு, சமூக நலனோம்பல்,

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவாகார, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு

---

தென் மாகாண சபை அமைச்சின் செயலாளர் ஒருவராகத் தற்போது கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் ஒருவர் 1990 செப்டெம்பர் 10 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருமாறு இலங்கை நிர்வாக சேவையில் நியமிக்கப்பட்டிருந்தார். அன்றைய தினம் கடமைகளைப் பொறுப்பேற்ற அவர் பயிற்சிக்குப் பின்னர் 1990 செப்டெம்பர் 27 தொடக்கம் தென் மாகாண சபையில் பணியிலமர்த்தப்பட்ட போதும், 9 மாதங்கள் கடந்ததன் பின்னரே, அதாவது, 1991 ஜுன் 27 ஆந் திகதியே சேவைக்குச் சமூகமளித்திருந்தமை தெரிய வந்தது. எனினும், குறித்த தினத்தில் சேவைக்குச் சமூகமளிக்காததற்கான காரணம் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் நியமன அதிகாரி மேற்கொள்ளாதிருந்ததும் அக்காலப் பகுதியை சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்குமாறு அவர் எந்த அடிப்படையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் கணக்காய்வில் புரியாதிருந்தது. அவ்வாறே, அரசாங்க சேவையிலிருந்து சம்பளமற்ற விடுமுறையைப் பெற்று அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமாகிய பல்கலைக்கழகமொன்றில் அவர் 1991 ஜுலை 27 வரை பணியாற்றியிருந்தமையும் கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், 9 மாத கால சம்பளமற்ற விடுமுறையை 91 நாட்களாகக் கருத்திற் கொண்டு 1991 டிசெம்பர் 09 இல் உள்ளவாறு முதலாவது சம்பள ஏற்றமும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்று பிரதம செயலாளர் அலுவலகத்தின் 8 வழங்கல் கட்டளைகளின் மூலம் தென் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்கென ரூபா 7,920,000 பெறுமதியான 55 டெல் வகையைச் சேர்ந்த மடிக் கணணிகள் வழங்கப்பட்டிருந்த போதும், அவற்றிற்குரிய பெறுவனவுக் கட்டளைகள் 2015 ஜுலை 28 வரை பெறப்படாதிருந்தன.

(ஒ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

---

(i) தனியார் காணியொன்றை அரசாங்கம் சுவீகரிக்காது சமூக சேவைகள் நிறுவனம் ஒன்றுக்காக அக்காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குமென மாகாண சபைகள் நிதியிலிருந்து ஏறக்குறைய ரூபா 6,500,000 அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்ட முன்மொழிதலுக்கேற்ப தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 4,825,000 பெறுமதியான மதிப்பீடு முறைப்படி தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டைத் தயாரித்தல், செய்த வேலைகளை மேற்பார்வை செய்தல், செலவினப் பட்டியல்களைத் தயாரித்தல் என்பன யாவும் தொழில்நுட்ப உத்தியோகத்தராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, முறையான அதிகாரமின்றி 2 சந்தர்ப்பங்களில் அவருக்கு ரூபா 107,862 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ii) தென் மாகாணத்தில் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகளுக்கு விநியோகிப்பதற்கென 120 பக்கங்களை கொண்ட 25,000 அப்பியாசப் புத்தகங்களை வழங்குவதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு அதிகாரசபையால் ரூபா

800,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ் வேலைத்திட்டமானது தென் மாகாண திட்டமிடல் செயலகத்தாலோ அல்லது பிரதம செயலாளர் அலுவலகத்தாலோ அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 4 மாதிரி அப்பியாசப் புத்தகங்களையும் பரீசீலித்த போது அப் புத்தகங்களில் உள்ள இணைப்பு ஊசிகள் அகற்றப்பட்டு மீண்டும் அவற்றை இணைத்து அவற்றினது வெளி அட்டைகள் பொருத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பணம் அறவிடப்படாது விநியோகிக்கப்படவுள்ள இந்த அப்பியாசப் புத்தகங்களில் விலை ரூபா 50 எனக் குறிப்பிட வேண்டிய அவசியம் யாது என்பது புரியாதிருந்தது. அவ்வாறே, கணக்காய்வுத் தினமான 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதியளவிலும் விநியோகிகக்ப்படாதிருந்த இந்த அப்பியாசப் புத்தகக் கையிருப்பைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரசபையாலோ அல்லது முதலமைச்சர் அலுவலகத்தாலோ இயலாது போயிற்று

(iii) மாத்தறை மாவட்ட பங்குபற்றல் அபிவிருத்தி நிறுவனத்தின் வேலை நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் அதன் ஆளுநர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய, தென் மாகாண சபை நிதியத்தில் ரூபா 9,209,593 செலவு வைக்கப்பட்டிருந்தது. மாகாணத்தில் உள்ள வறிய பிள்ளைகளுக்கு இப் பணத்தைப் புலமைப் பரிசில்களுக்கு உபயோகப்படுவதற்கான வேண்டுகோளை அந்நிறுவனம் கோரியிருந்தது. 2011 ஒக்டோபர் 25 ஆந் திகதிய மாகாண அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இத்தொகை தென் மாகாணத்தில் உள்ள பிள்ளைகளது சுகாதார, கல்வி, விளையாட்டுத்துறை போன்றவற்றினது அபிவிருத்திக்காக குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத்தொகையையும் உள்ளடக்கிய ரூபா 9,446,927 கூட்டுத்தொகையிலிருந்து வாழ்த்து அட்டைகளை அச்சிடுவதற்கும் பிரித் தோதுதலை உள்ளடக்கிய கசட்டுகள், அட்டைகள் மற்றும் தாலாட்டுப் பாடல்கள் அடங்கிய பிரசுரங்கள், பல்வேறு வகை அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் எழுது கருவி வகைப் பொருட்கள் போன்ற நானாவித மீண்டெழும் செலவினங்களுக்குமென அதிகாரசபையால் ரூபா 4,743,935 செலவிடப்பட்டிருந்தது. எஞ்சியிருந்த தொகை ரூபா 4,702,992 எஞ்சியிருந்தது.
இத்தொகை மூலம் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறிவூட்டுவதற்கான “சுவசெத மெஹெவர” எனும் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவோருக்கு பரிசாக வழங்குவதற்கு பிரித்தோதுதலை உள்ளடக்கிய கெசட்டுக்கள், அங்குலிமால பிரிக்தை உள்ளடக்கிய அட்டைகள் மற்றும் தாலாட்டுப் பாடல்களை உள்ளடக்கிய வர்ணப் பிரசுரங்களை அச்சிடுவதற்காக அதிகாரசபையால் ரூபா 214,000 செலவிடப்பட்டிருந்தது. பிரித் ஓதுதலை உள்ளடக்கிய கெசட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு 4 நிறுவனங்களிலிருந்து கோரப்பட்ட கூறுவிலைகளில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் பரீசீலிக்கப்பட்ட போது அவை பாவனையில் இல்லாத இலக்கங்கள் என்பது கணக்காய்வில் உறுதியாயிற்று. அத்துடன் முறையற்றவாறு முதலமைச்சர் அலுவலகத்தின் மூலம் பெறப்பட்டிருந்த அல்லது தயாரிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளை அதிகாரசபை பெற்றிருந்ததும்,

அதிகாரசபை கூறுவிலைகளைக் கோரியதாகப் போலி ஆவணங்கள் கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்ததும் புலனாகியது.

- தென் மாகாண கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் தற்போது பணியாற்றும் அல்லது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களது பிறந்த தினங்களின் போது வாழ்த்துத் தெரிவிப்பதற்காக 46,500 வாழ்த்து அட்டைகளையும் உறைகளையும் அச்சிடுவதற்குத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அதிகாரசபை ரூபா 503,595 கொடுப்பனவு செய்திருந்தது. இது தொடர்பாக முதலமைச்சர் அலுவலகத்தால் முறையற்றவாறு மேற்கொள்ளப்பட்ட கொள்ளல் நடைமுறைகள் அடங்கலான சகல கொடுக்கல் வாங்கல்களும் சட்டபூர்வமானவையெனக் காட்டும் விதத்தில் அதிகாரசபை ஆவணங்களைத் தயாரித்திருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

- இப்பணத்தில் செலவிடப்பட்டு அச்சிடப்பட்ட புத்தகங்கள், கெசட்டுக்கள் மற்றும் வேறு பொருட்கள் அடங்கலாக சகலவற்றிலும் தென் மாகாண முதலமைச்சரின் பரிசு எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், இப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கப் பணம் செலவாகியது குறித்த எதுவித குறிப்பும் அவற்றில் இருக்கவில்லை.

- எழுத்தாளர்களுக்கு உதவி வழங்கும் விதத்தில் ரூபா 715,467 செலவில் பல்வேறு வகையான 3190 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமான 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதியளவிலும் அவை விநியோகிக்கப்படாது முதலமைச்சர் அலுவலகத்திலும் அதிகாரசபையிலும் இருந்ததுடன் அச்சிடற் செலவாக பெண் எழுத்தாளர் ஒருவருக்கு ரூபா 28,000 வழங்கப்பட்டிருந்தமையும் புலனாகியது அதற்கமைய, கல்வி மற்றும் சுகாதாரத்துறை அபிவிருத்திக்காகப் பயனுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தக் கூடியதாக இருந்தும் தனிப்பட்ட தோற்றத்திலான செலவுகளை மேற்கொண்டமையால் குறித்த நிதியேற்பாடு நோக்கங்களுக்கு முரணானவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iv) முதலமைச்சரது செலவிற்கென வேறாக ஒரு செலவினத் தலைப்பில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கையில் முதலமைச்சரது உத்தியோகபூர்வ மனையின் தோட்ட அபிவிருத்திக்காக அதிகாரசபையின் இலக்குகளுக்கும் செயற்பாடுகளுக்கும் முரணாக பொதுக் கணக்கின் மூலம் ரூபா 311,520 செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாகத் பிரதம செயலாளரது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

(ஓ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

அதிகாரசபை ஊழியர்களது சம்பளம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது தாபன விதிக் கோவை ஏற்பாடுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கமைய சம்பள மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

- 2006 செப்டெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பை அதிகாரசபை ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2006 டிசெம்பர் 26 ஆந் திகதிய டிஎம்எஸ்/பி/03/01/03/01/எஸ்ஏ இலக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு முரணாக சம்பள மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

- முறையான அங்கீகாரமின்றி, பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கமைய சகல பதவி நிலை அல்லாத ஊழியர்களுக்கும் 2008 ஜூலை 01 தொடக்கம் 4 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

- 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க, மே 26 ஆந் திகதிய 28(1) ஆம் இலக்க, ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(11) ஆம் இலக்க, 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 36 ஆம் இலக்க மற்றும் 2007 ஒக்டோபர் 15 ஆந் திகதிய 36(1) ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க, ஜுன் 15 ஆந் திகதிய 15/90(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளுக்கு முரணாக 2006 ஜனவரி 01 தொடக்கம் 2012 ஜனவரி வரை 60 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) அதிகாரசபை 2013 ஜனவரி தொடக்கம் 2014 நவம்பர் வரை 21 அமையத் தொழிலாளர்களை ஆட்சேர்த்து அவர்களை தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சரிடம் விடுவித்திருந்ததுடன் அதிகாரசபையின் கடமைகள் எவற்றையும் மேற்கொள்ளாத போதும், அவர்களுக்குச் சம்பளமாக 2015 மே மாத இறுதியில் உள்ளவாறு ரூபா 5,458,179 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) தென் மாகாண ஆளுநர் செயலகம்

நான்கு சந்தர்ப்பங்களில் நடைபெற்ற பல்வேறு வைபவங்களின் போது ஏற்பட்ட ரூபா 443,812 செலவானது ஆளுநருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற் குறிப்பிடப்பட்ட சகல வைபவங்களுக்கும் முன்கூட்டிய மதிப்பீடுகள் தயாரிக்கப்படவோ அல்லது மாகாண நிதி விதி 418 இன் பிரகாரம் கொள்வனவு வழிகாட்டலுக்குக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்படாது செலவு செய்யப்பட்டிருந்ததுடன் வைபவங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது செலவிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, குறித்த செலவு மேற்கொளள்ளப்படும் போது மாகாண நிதி விதிகள் 84,85 மற்றும் 86 என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

(ii) ‘‘சம்மாபிமானி வேத உபதேச நிகழ்ச்சித்திட்டத்தின்’’ பொருட்டு ரூபா 100,000 செலவிடப்பட்டு 4000 பால் பக்கற்றுக்கள் விற்பனை முகவர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பாக அந்நிறுவனத்தின் உரிமையாளரால் 2015 ஜுன் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூற்றுக்கமைய அவர் ஆளுநர் செயலகத்திற்குப் பால் பக்கற்றுக்களை விற்பனை செய்யவில்லை எனவும் அன்றைய தினம் அவரிடத்தே இருந்த கையிருப்பின்படி எவ்விதத்திலேனும் அவ்வாறாக வழங்குதலை மேற்கொண்டிருக்க முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iii) அவ்வாறே, வேறொரு வியாபார நிலையத்திலிருந்து மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 100,000 செலவில் 4000 மீன் அடைத்த பணிஸ் துண்டுகள் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த விற்பனை நிலைய உரிமையாளரால் 2015 மே 18 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூற்றின் பிரகாரம் அவர் எச் சந்தர்ப்பத்திலும் அவ்வகையான பற்றச்சீட்டுகக்ளையோ பொருட்களையோ வழங்கியிருக்கவுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iv) லபுதூவ மற்றும் வெலிகம ஆகிய இடங்களில் இரு ஆசிரியர்களுக்கு நன்றி பகரும் வைபவங்களுக்கு ‘‘கலாவ ரசவிதீமே கலாவ’’ எனும் செயலமர்விற்கு மேற்கொண்ட செலவினத்திற்காக மீளளிக்கப்பட்ட ரூபா 252,762 இல் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 125,000 க்கான மதிய உணவுப் பார்சல் தொடர்பாக பரீசிலிக்கப்பட்டபோது 3 நிறுவனங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்படடிருந்த முகவரிகளும் தொலைபேசி எண்களும் போலியானவை என்றும் அவ்வாறான வியாபார நிறுவனங்கள் அம் முகவரிகளில் இல்லாதிருந்தமையும் தெரிய வந்தது.

(v) வெலிகமை வைபவத்திற்கு ரூபா 80,812 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மீன் அடைத்த பணிஸ் துண்டுகளும். பால் பக்கற்றுக்களும் கொழும்பிலும் குண்டசாலையிலும் உள்ள இரண்டு விற்பனை நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வெலிகம பிரதேசத்தில் அல்லது அண்மித்த இடமொன்றிலிருந்து குறித்த பொருட்களைக் பெறக்கூடியதாக இருந்தும் மேற்குறித்தவாறு தொலை தூரத்திலிருந்து பெற்றுக் கொண்டமைக்கான காரணம் கணக்காய்வில் புரியாதிருந்தது.

(vi) மேலும், மேற்படி வைபவத்திற்கு ஒலி பெருக்கியை வழங்கியதற்கு ரூபா 14,000 செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட முகவரியும் தொலைபேசி இலக்கமும் தவறானவை என உறுதி செய்யப்பட்டது.

(ஆ) ‘‘சுப தகுணக் தினூ ஜயக்கிரஹண ரெகனிமு’’ எனும் தொனிப்பொருளில் 2015 ஆம் ஆண்டில் முறையான பொருட் கொள்வனவு நடைமுறையைத் கடைப்பிடிக்காது 380,000 வாழ்த்து அட்டைகள் பிரசுரிக்கப்பட்டு 2015 ஜனவரி 08 ஆந் திகதிய சனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் தென் மாகாணத்தின் சகல பாடசாலை சிறார்களுக்குமிடையே அவை விநியோகிக்கப்பட்டிருந்தன. தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி

அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளராது 2014 டிசெம்பர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த வாழ்த்து அட்டைகள் சிறார்களின் பெற்றோர்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும் என சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

-------------------------------------------------------------

(i) காலி மாவட்டக் கனிஷ்ட பாடசாலை ஒன்றில் பணியாற்றிய உதவி ஆசிரியர் ஒருவர் சமர்ப்பித்த போலியான சம்பள விபரத்தின் அடிப்படையில் 2008 ஒக்டோபர் தொடக்கம் 2013 ஏப்ரல் வரை ரூபா 454,140 சம்பளமாகவும் ரூபா 23,969 விசேட படியாகவும் தவறுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) போலியான இடமாற்றக் கடிதம் மற்றும் சான்றிதழ் மூலம் தென் மாகாண ஆசிரியர் சேவையில் சேர்ந்து மோசடியாகச் சம்பளம் பெற்ற 7 ஆசிரியர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடையாதிருந்ததுடன் அவர்கள் சம்பளமாகவும் படியாகவும் பெற்றிருந்த ரூபா 3,707,024 மீண்டும் அறவிடப்படாதுமிருந்தது.

(iii) திணைக்களத்தில் கடமைக்கமர்த்தப்பட்ட சாரதி ஒருவர் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேச சபை அங்கத்தவராக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் அவர் நிரந்தர சேவை நிலையத்துக்கு வருவது, செல்வது, கையெழுத்திடுவது எதுவுமின்றியும் கடமைகள் எதனையும் மேற்கொள்ளாதும் அவருக்கு ரூபா 1,994,197 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) காணி ஆணையாளர் திணைக்களம்

---------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய 3 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்ட போது மைலோமீட்டர்களுக்கும் ஓட்ட அட்டவணைகளுக்கும் இடையே முறையே 6820 கி.மீ, 387 கி.மீ, 498 கி.மீ என வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதற்கமைய பயணஞ் செய்யாத தூரத்தின் பொருட்டுப் பெற்றிருந்த எரிபொருளினது சந்தை விலை ஏறக்குறைய ரூபா 111,600 ஆகும். மேலும் இவற்றுள் இரண்டு வாகனங்களது ஓட்ட அட்டவணைகளில் கணக்காய்வின் பச்சைநிற மையினால் குறிப்பிடப்பட்டு அச்சந்தர்ப்பத்திலேயே சாரதிகளிடமிருந்தும் கையெழுத்தை பெற்றிருந்த மைலோ மீட்டர் குறிப்புகள் மோசடியாக மாற்றஞ் செய்யப்பட்டிருந்தன.

(உ) தென் மாகாண வருமானத் திணைக்களம்

--------------------------------------------------------------------

திணைக்களத்திற்குச் சொந்தமான ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்றினது எரிபொருள் நுகர்வின் பிரகாரம் 2014 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை வழங்கப்படக் கூடிய எரிபொருளுக்கும் கூடுதலாக 218 லீட்டர் வழங்கப்பட்டிருந்தது. அந்த எரிபொருளினது பெறுமதி ரூபா 35,425 ஆகும்.

(ஊ) றுஹுணு சுற்றுலாப் பணியகம்

----------------------------------------------

பணியகத்தின் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் 2013 தொடக்கம் சராசரியாக கிட்டத்தட்ட ரூபா 1 மில்லியன் தேங்கியவாறிருந்ததுடன் இலங்கை

வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 10 மில்லியனுக்குக் கூடுதலாக தேங்கியவாறும் இருந்தது. ஆயினும், அவற்றை முதலீடு செய்வதன் மூலம் பணியகத்திற்கு நலனை ஈட்டித் தருவதற்கான நடவடிக்கையை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை.

(எ) மாத்தறை மாவட்டத்தின் கனிஷ்ட பாடசாலை ஒன்றில் அலுவலக உதவியாளராக 2013 ஒக்டோபர் 14 முதல் நியமனம் பெற்ற கொட்டபொல பிரதேச சபை அங்கத்தவர் ஒருவர் அன்றைய தினம் தொடக்கம் 2015 பெப்ரவரி 28 வரையான காலப்பகுதியின்போது 2 நாட்கள் மாத்திரமே வித்தியாலயத்திற்குச் சமூகமளித்திருந்தார். 2013 நவம்பர் முதல் கணக்காய்வு நடைபெறும் சந்தர்ப்பமான 2015 மார்ச் வரை வித்தியாலயத்திலிருந்து சம்பளமாக அவர் பெற்றிருந்தது ரூபா 406,798 ஆகும். அக்காலப்பகுதியின் போது கொட்டபொல பிரதேச சபை அங்கத்தவராக அவர் ரூபா 135,000 அங்கத்தவர்களுக்குரிய படியாகப் பெற்றிருந்தார். இச் சேவைக்காலத்தின்போது தெனியாய வலயக்கல்வி அலுவலகம் மற்றும் தென் மாகாணக் கல்வி அமைச்சில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த இந்த உத்தியோகத்தருக்கு தெனியாய வலயக் கல்வி அலுவலகத்தால் குறிப்பாக எதுவித கடமையும் அளிக்கப்படாததுடன் கல்வி அமைச்சில் அவர் ஆற்றிய விசேட பணி யாது எனவும் உறுதியாகவில்லை.

(ஏ) பிரதம செயலாளர் அலுவலகம்

---------------------------------------------------

2013 ஜுன் 10 ஆந் திகதிய வாகன ஏல விற்பனைகளின் போது இரு வாகனங்கள் ரூபா 2,476,500 க்கு விற்பனையாகியிருந்தன. எனினும், இந்த வாகனங்களது செஸி இலக்கம் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை தெரிய வந்ததன் காரணமாக கொள்வனவாளருக்குப் பணம் திருப்திச் செலுத்தப்பட்டு வாகனம் மீளப் பெறப்பட்டிருந்தது. இக் குறைபாட்டை விசாரித்து பொறுப்பான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை 2015 ஆகஸ்ட் வரை நடைபெறவில்லை.

(ஐ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

-----------------------------------------------------------------------------

(i) கெக்கனதுர ரத்மலே, திக்வெல்ல வீதிக்கு 1 கியூபிக் மீட்டர் ஏபீசீ கலவைக் கற்கள் 2014 டிசெம்பர் 01 தொடக்கம் 31 வரை ரூபா 2,900 வீதப்படி வழங்கப்பட்டிருந்தது. 2015 ஜனவரி 01 தொடக்கம் 1 கியூபிக் மீட்டர் ரூபா 3,400 வீதப்படி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒரு தனியார் நிறுவனம் மற்றும் வேறு தனியார் நிறுவனம் 2014 டிசெம்பர் வழங்கியிருந்த ஏபீசீ கலவைக் கற்களுக்கு முறையே 1 கியுபிக் மீட்டர் ரூபா 3,395 வீதப்படியும் ரூபா 3400 வீதப்படியும் அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, 2015 பெப்ரவரி 24 ஆந் திகதியளவில் 2014 டிசெம்பரின் போது வழங்கப்பட்டிருந்த ஏபீசீக்கு ரூபா 1,321,394 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2015 தேசத்துக்கு மகுடம் பிரவேசப் பாதையாகிய ஒகஸ்பே, அதுடாவ, நாதுகல வீதியை அபிவிருத்தி செய்வதற்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தனியார் நிறுவனம் ஒன்று 1 கியுபிக் மீட்டர் ரூபா 2,900 வீதப்படி 718.11 கியுபிக் மீட்டர் ஏபீசீ யை வழங்கியிருந்தது. இதற்கமைய, இந்த வழங்குநருக்கு ரூபா 2,082,519 கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதும், ரூபா 2.197,000 வழங்கப்பட்டமையால்

ரூபா 114,481 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது.

(ஓ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

(i) தெல் போன குடிநீர் செயற்திட்டம் அமுலாக்கப்படுகையில் ஏற்பட்ட நிதி மோசடி காரணமாக ரூபா 208,790 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதனை அறவிடுமாறு பிரதம செயலாளர் செயலகம் அறிவித்திருந்த போதும் அதில் ரூபா 50,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய பணம் அறவிடப்படவில்லை. இதற்குப் புறம்பாக, 2015 ஜனவரி 20 ஆந் திகதிய கணக்காய்வு ஐயவினாவின் மூலம் தெரிவித்திருந்த இயந்திரச் சேவைகளுக்கான ரூபா 172,000 கூடுதல் கொடுப்பனவை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ii) அதிகாரசபை அங்கத்தவர்களுக்கான நிதியேற்பாட்டின் கீழ் காலி மாவட்ட நூலகத்திற்கு வழங்குவதற்கென 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 192,375 பெறுமதியான 15 உருக்கு அலுமாரிகள் விநியோகிக்கப்பட்ட விதத்தை அறிவிக்கும் தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 6 குறைவான நிதிப் பயன்பாடு

(அ) மாகாண கலவிப் பணிப்பாளரது அங்கீகாரத்துடன் மேலதிகப் பணத்தை நிலையான வைப்புகளில் இடலாமெனினும், காலி மாவட்ட மகளிர் பாடசாலை ஒன்றின் இரு வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 12,554,111 தொகை 2014 ஜுன் முதல் பயனற்றிருந்தது.

(ஆ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

(i) மூலதனச் செலவின விடயத்தின் கீழ் பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 40,523,827 அதி குறைந்த வட்டி வீதத்திலான சேமிப்புக் கணக்கு ஒன்றில் 2 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது.

(ii) அதிகாரசபையின் அங்கத்தவர்களுக்கான நிதியேற்பாட்டு வங்கி நடைமுறைக் கணக்கில் 2014 ஜனவரி 01 முதல் ரூபா 38,678,272 மீதி இருந்ததுடன் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அம் மீதி ரூபா 49,182,044 ஆகியதால் அதன் சராசரி மீதி ரூபா 43,930,158 ஆயினும் மாகாண சபையால் மூலதனச் செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்ட இத் தொகை இவ்வண்ணம் நடைமுறைக் கணக்கில் தேங்கியிருந்தமை பயனற்ற செயலாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.7 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

(i) 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திட்டத்தின் கீழ் 10 முற்பள்ளிகளுக்கு வழங்குவதற்காக 2013 ஜனவரி 23 ஆந் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 148,191 பெறுமதியான முன்பள்ளி உபகரணங்கள் விநியோகிக்கப்படாது 2 ஆண்டுகளுக்கு மேலாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ii) கீழே காட்டப்பட்டவாறு 8 கல்வி வலயங்களில் மூடப்பட்டிருந்த 104 பாடசாலைகளில் 51 பாடசாலைகள் எதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அவற்றிற்குச் சொந்தமான 102 கட்டிடங்களும் 72 ஏக்கர், 3 றூட், 29 பேர்ச்சஸ் காணியும் பயன்படுத்தப்படாதிருந்தன. எல்பிட்டிய வலயத்தில மூடப்பட்டிருந்த பாடசாலை ஒன்றில் உள்ள கட்டிடத்தை 2 பிரதேசவாசிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

| **வலயம்** | **மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை** | **எதற்கும் பயன்படுத்தப்படாத பாடசாலைகள்** | | |
|---|---|---|---|---|
| | | **பாடசாலைகளது எண்ணிக்கை** | **கட்டிடங்களது எண்ணிக்கை** | **காணியின் அளவு** |
| காலி | 32 | 10 | 17 | ஏறக்குறைய 3 ஏக்கர், 3 றூட் |
| எல்பிட்டிய | 21 | 12 | 22 | ஏறக்குறைய 22 ஏக்கர் |
| மாத்தறை | 17 | 8 | 8 | 4 ஏக்கர், 1 றூட், 32 பேர்ச்சஸ் |
| அகுரஸ்ஸ | 7 | - | - | - |
| வலஸ்முல்ல | 8 | 5 | 10 | 9 ஏக்கர், 2 றூட், 19 பேர்ச்சஸ் |
| தெனியாய | 1 | 1 | 2 | 5 ஏக்கர் |
| அம்பாந்தோட்டை | 6 | 3 | 7 | 5 ஏக்கர் |
| முலட்டியான | 12 | 12 | 36 | 23 ஏக்கர், 18 பேர்ச்சஸ் |
| மொத்தம் | 104 | 51 | 102 | 72 ஏக்கர், 3 றூட்,29 பேர்ச்சஸ் |

(ஆ) உடுகம வலயக் கல்வி அலுவலகம்

(i) அலுவலகத் தொலைபேசி முறைமையைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 20,048 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், கணக்காய்வுத் தினமான 2014 டிசெம்பர் 11 ஆந் திகதியளவில் 7 மாதங்களாக அத்தொலைபேசி முறைமை செயற்படாதிருந்தது.

(ii) பயணங்களுக்குப் பயன்படுத்தப்படாது நிறுவனத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 58,520 செலவிடப்பட்டிருந்தது. 2014 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியின் போது எதுவித பணிகளும் ஒப்படைக்கப்படாது அதன் சாரதிக்கு ரூபா 283,935 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) காலி மாவட்டத்தில் உள்ள மகா வித்தியாலயம் ஒன்றிற்குச் சொந்தமான 8500 சதுர அடியான 9 கட்டிடங்கள் உடைந்தவாறிருந்தமையால் அவை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) றுஹுணு சுற்றுலாப் பணியகம்

---

(i) தெனுவல சுற்றுலா விடுதிக்காக 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,364,785 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமும் தளபாடங்களும் பொருத்துக்களும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்திற்கென அவை எதுவிதத்திலும் பயன்படுத்தப்படாதுமிருந்தன.

(ii) சமுத்திரத் தொல்பொருள் சுற்றுலா ஈடுபாட்டுச் செயற்திட்டத்திற்கென பணியகம் 2014 இறுதி வரை ரூபா 6,335,326 செலவிட்டிருந்த போதும் 2015 ஜனவரி மாதமளவில் அச் செயற்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது.

(iii) ''றுஹுணு அபிமங்கல செயற்திட்டத்திற்கு'' மதிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபா 66,402,253 ஆகும். 2010 தொடக்கம் 2014 டிசெம்பர் வரை இதற்கென ரூபா 47,722,156 செலவிடப்பட்டும் பாதுகாப்பிற்கென ரூபா 215,900 செலவிடப்பட்டுமிருந்தது. எனினும், 2015 ஜனவரியில் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலும் அது பயன்படுத்தப்படாதிருந்தது.

(உ) பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - மாத்தறை

---

(i) தெனியாய மருத்துவமனைக்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற அல்ட்ரா சவுன்ட் ஸ்கானர் இயந்திரமும் எக்ஸ் கதிர் இயக்க இயந்திரமும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ii) மொறவக மாவட்ட மருத்துவமனைக்கு 2006 மார்ச் மாதத்தில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 35 கிலோ வாட்ஸ் மின் உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரம் 2014 நவம்பர் 11 ஆந் திகதியளவில் செயலற்றுப்போய் ஆண்டுகள் பல கழிந்திருந்தன. மின் உற்பத்தி இயந்திரமானது மருத்துவமனைக்கு அத்தியாவசிய உபகரணமாக இருந்தும் அதனைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,164,350 செலவில் பழுதுபார்க்கப்பட்ட 31-9396 ஆம் இலக்க ஜீப் வண்டி பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயணம் எதனையும் மேற்கொள்ளாதிருந்தும் 2014 செப்டெம்பர் 30 ஆந் திகதிய ஏல விற்பனையின் போது ஏலத்திற்கு விடப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2014 செப்டெம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக் காரணமாக இந்த வாகனம் ஏலத்திலிடப்படுவது நிறுத்தப்பட்டு 2014 ஒக்டோபர் 21 ஆந் திகதியன்று மீண்டும் றுஹுணு சுற்றுலாப் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும், 2015 ஆகஸ்ட் வரை இவ் வாகனம் பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது தெரியவந்தது.

## 6.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளுநர் செயலகம்

--------------------------------

2014 செப்டெம்பர் 11 ஆந் திகதியன்று பிரதம செயலாளரை உள்ளடக்கிய 5 பேர் அடங்கிய குழுவினால் தென் மாகாணம் தொடர்பான புத்தகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அது சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் நபர் ஒருவரிடம் ஒப்படைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள அறிவுறுத்துரைகளைக் கடைப்பிடிக்காது புத்தகத்தை அச்சிடுவதற்கு ரூபா 4,250,129 செலவிடப்பட்டிருந்தது.

(ii) புத்தகத்தை அச்சிடும் நடவடிக்கைகள் தொடர்பாக அந்நபருக்கும் பிரதம செயலாளருக்குமிடையே 2014 செப்டெம்பர் 22 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 500 ஆகும். அதில் 150 புத்தகங்களை ரூபா 1,275,000 கிரயத்திலான எழுத்தாளர்களுக்குரிய பதிப்புரிமை தொகையாக வழங்குவதற்கு உடன்பாடாகியிருந்த போதும், அக்கிரயம் தொடர்பாகவோ அல்லது புத்தகத்தினது உரிமை மற்றும் புத்தகத்தை அச்சிடுவதற்கான நோக்கம் தொடர்பாகவோ உள்ள முக்கிய விடயங்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

(iii) உடன்படிக்கைப் பிரகாரம், மொத்தக் கிரயத்தின் 25 சதவீதமான இறுதிக் கொடுப்பனவு சகல புத்தகங்களும் பெறப்பட்டதன் பின்னரே வழங்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், எஞ்சிய 350 புத்தகங்களும் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றே பெறப்பட்டிருந்தன.

(iv) இதற்கமைய, புத்தகமொன்றிற்கு ரூபா 12,143 அதிகளவு கிரயம் செலவிடப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2015 மே 06 ஆந் திகதியளவிலும் இப் புத்தகங்கள் களஞ்சியத்திலேயே இருந்தமையால் இதற்கெனச் செலவிடப்பட்ட ரூபா 4,250,129 பயனற்ற செலவினமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தென் மாகாண வருமானத் திணைக்களம்

------------------------------------------------------------------

நுவரெலியா பிரதேசத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நிறுவனத்தின் 57 உத்தியோகத்தர்களுக்காக நடாத்துவதற்கு ரூபா 341,000 செலவிடப்பட்டிருந்தது. இதற்கு நிறுவன உத்தியோகத்தர்களே வளவாளர்களாக பயன்படுத்தப்பட்டிருந்தனர். போக்குவரத்துக்கு 3 தனியார் பஸ்களை விட நிறுவனத்தினது வாகனக் குழாமின் வாகனமொன்றும் பயன்படுத்தப்பட்டிருந்தது. தென் மாகாணத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான வசதிகள் இருக்கையில் தொலைவில் உள்ள இடத்தில் இச்செயலமர்வை நடாத்த வேண்டிய காரணம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிகைப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண கடற்றொழில், கலாசார, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சிற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மொனராகல பிரதேசத்தில் செயலற்றுப் போனமையால், 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பெறப்பட்டதாக திகதி முத்திரை பொறிக்கப்பட்ட திகதி அற்ற கடிதம் ஒன்றிற்கமைய மாதாந்தம் ரூபா 200,000 கொடுப்பனவு செய்து ஜீப் வண்டியை வாடகைக்குப் பெறுவதற்குக் கொள்வனவுச் சபை தீர்மானித்திருந்தது. அமைச்சு 3 குழாம் வாகனங்களைக் கொண்டிருந்த போதும், இவ் வாகனத்திற்கு 4 மாதங்களுக்கு ரூபா 800,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இக்காலப்பகுதிக்குரிய ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ஈ) கால்நடை உற்பத்தி மறறும் சுகாதாரத் திணைக்களம் - மாத்தறை

-----------------------------------------------------------------------------------------------------------------

(i) கெக்கனதுர விவசாயப் பண்ணையில் விதை பொருட்கள் காப்பகத்திற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதியன்று ரூபா 1,220,240 மின்பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொண்டு செல்லல், கேபிளைப் பொருத்துதல், பரீசீலனை செய்தல் ஆகியவற்றிக்கு ரூபா 92,680 என கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி 2014 நவம்பர் 11 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறித்த இயந்திரம் விவசாயப் பண்ணையில் நிறுவப்பட்டிருந்த போதும், 2014 ஜுன் 10 முதல் காப்பகம் மூடப்பட்டமையால் செலவழித்த ரூபா 1,312,920 பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ii) 6 கோழிக்கூடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 2,000,578 பெறுமதியான 6 மதிப்பீடுகள் மாத்தறை பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், அதற்கெனப் போதிய நிதியேற்பாடு இன்மையால் மாகாண அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைச்சின் செயலாளரால் ரூபா 200,000 வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, இதன் பொருட்டு 2014 டிசெம்பர் மாதமளவில் ரூபா 197,916 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கோழிக் கூடுகள் முறையான நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்படாமையால் அக் கூடுகளைப் பயன்படுத்தாது மூடி வைத்தமையால் கொடுப்பனவு செய்த ரூபா 197,916 பயனற்ற செலவினமாகியிருந்தது.

(உ) பிரதம செயலாளர் அலுவலகம்

----------------------------------------------------------

(i) 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய வரவு, செலவுத் திட்டம் தொடர்பாக அறிவூட்டுவதற்கான செயலமர்வொன்று ரூபா 112,123 செலவில் வக்வெல்ல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டிருக்கையில் தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தால் அதே நோக்குடன் மற்றுமொரு செயலமர்வொன்றை நடாத்துவதற்காக 2014 நவம்பர் 25 ஆந் திகதியன்று ஹோட்டல் ஒன்றிற்கு ரூபா 654,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச் செயலமர்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் 200 பேரின் பொருட்டுக் குறித்த செலவு மேற் கொள்ளப்பட்ட போதும், அவ்வுத்தியோகத்தர்கள் யார் என்பவற்றுக்கான தரவுகள் செயலமர்விற்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வளவாளர்கள் யார் என்பது தொடர்பான தரவுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

அவ்வாறே, இச் செயலமர்வுக்கு 2014 நவம்பர் 24 ஆந் திகதியன்று ரூபா 200,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதும் இறுதிக் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலில் முற்பணம் பெறப்பட்டமை குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதம செயலாளர் அலுவலகத்தால் அதிமேதகு சனாதிபதி அவர்களது இரண்டாவது பதவி ஏற்றலின் நான்காம் ஆண்டை நினைவு கூறு முகமாக வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கு புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கென 2 நிறுவனங்களுக்கு ரூபா 828,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவானது நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதொரு பயனற்ற செலவினமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) முதலமைச்சர் அலுவலகம்

(i) தலைமை அமைச்சின் நோக்கங்களுக்கு முரணாண கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 4,348,000 செலவிடப்பட்டிருந்தது.

| **செயற்திட்டம்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| 150,000 ‘‘தக்ஷிண நாட்காட்டிகள்’’ அச்சிடப்பட்டமை | 1,942,500 |
| 17,500 நாட்காட்டிகள் அஞ்சலில் அனுப்பப்பட்டமை | 437,500 |
| 400,000 சிறுவர்களுக்கு 800,000 நேர சூசிகளை அச்சிட்டமை | 1,968,000 |
| | 4,348,000 |

(ii) தலைமை அமைச்சு 13 குழாம் வாகனங்களைக் கொண்டிருந்த போதும், ‘‘தக்ஷிண ஜீவணி பாடசாலையின் அறிவை அளவிடும் போட்டிக்காக’’ கொள்வனவு செய்யப்பட்ட வினாத்தாள்களைக் கொண்டு வருவதற்கு போக்குவரத்துச் செலவாக வெளி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 50,000 வழங்கப்பட்டிருந்தது.

## 6.9 இணங்காணப்பட்ட இழப்புகள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கீழே குறிப்பிடப்பட்ட 2 நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 186 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,682,240 அறவிட முடியா நிலையிலிருந்தது.

| **நிறுவனம்** | **ஊழியர்களது எண்ணிக்கை** | **தொகை** |
|---|---|---|
| | | **ரூபா** |
| தென் மாகாணக் கல்வித் திணைக்களம் | 158 | 11,234,867 |
| தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | 28 | 447,373 |
| | 186 | 11,682,240 |

(ஆ) றுஹுஹுணு சுற்றுலாப் பணியகம்

(i) தெனியாய சுற்றுலாத் தகவல் நிலையத்தை நிர்மாணித்தல்

- நிலையத்தை நிர்மாணிப்பதற்கான கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கையில் ஒப்பந்தகாரர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த ரூபா 137,007 கழிவுப் பணத்தைக் கழித்துக் கொள்ளாது ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- கழிவு நீர்ப்பாதைச் சுவரில் கொங்கிரீட் இடுவதற்கு 0.804 கன மீட்டர் கூடுதலாகக் கணிக்கப்பட்டு அதன் பொருட்டு ரூபா 12,060 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) பணியகத்தின் மதுனாகல வெந்நீர் ஊற்றுச் செயற்திட்டத்திற்குரிய கழிவறைத் தொகுதியைப் பழுதுபார்க்கும் போது மதிப்பீட்டிற்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், மேலதிக, வேலைக்காக ரூபா 35,244 மீண்டும் அளவை அறிக்கையில் உட்படுத்தப்பட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்குப் புறம்பாக, நீர்வாழ் உயிரின காட்சிச்சாலை நவீனமயப்படுத்துவதற்காக 4 மீன் தொட்டிகள் நிர்மாணிக்கபட்டிராத போதும், அதற்கென ரூபா 14,000 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(இ) கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

2015 மார்ச் 02 ஆந் திகதியன்று அதிகார சபைக்குச் சொந்தமான மீட்டியாகொட செம்மண் உற்பத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 169,067 பெறுமதியான இரசாயனப் பொருட் கையிருப்பு காலாவதியாகிய நிலையில் பயன்படுத்தப்பட்டிராது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தென் மாகாண கடற்றொழில், கலாசார, உணவு வழங்கலும் விநியோகமும், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட பெலி அத்த ஔடத உற்பத்திச் சாலையில் ஜீவவாயுக் கூறு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான ஒப்பந்தம் 2013 ஒக்டோபர் 21 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டிய போதும், அது 2015 பெப்ரவரி மாதத்திலேயே முடிவுற்றுக் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த செயற்திட்டம் நிறைவுக்கு முன்னரே 2014 பெப்ரவரி 21 ஆந் திகதியன்று ஒப்பந்தகாரருக்குப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமையால் தாமதக் கட்டணமாகிய 92,062 அறவிடப்பட முடியாது போனமை அவதானிக்கப்பட்டது.

(உ) தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை திவிநெகும மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் அதிகாரசபையிடம் விண்ணப்பித்துக் கொண்டமைக்கு அமைய, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும செயற்திட்டத்தின் மூலம் 2014 செப்டெம்பர் 05 தொடக்கம் 07 வரை பிபில பிரதேசத்தில் நடாத்திய

பயிற்ச்சிச் செயலமர்வொன்றிற்கு உத்தியோகத்தர்களை அழைத்துச் செல்வதற்கு 28 தனியார் பஸ்களுக்கு ரூபா 1,304,500 அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையில் ரூபா 464,500 கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2015 மார்ச் வரையில் மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் அத் தொகையை மீளளிப்பு செய்யுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் கோரப்பட்டிருந்த போதும் 2015 ஒக்டோபர் 15 வரை அத்தொகை மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(ஊ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

---

(i) அதிகார சபையின் கெப் வண்டி ஒன்று 2013 மார்ச் 18 ஆந் திகதியன்று திக்வெல்ல பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியிருந்தது இதனைப் பழுதுபார்ப்பதற்கு அதிகாரசபை ரூபா 182,458 கொடுப்பனவு செய்திருந்த போதும், காப்புறுதிக் கம்பனியால் 2013 செய்டெம்பர் 05 ஆந் திகதியன்று விபத்து தொடர்பாக வழங்கியிருந்த தொகை ரூபா 159,470 மாத்திரமே இதற்கமைய, அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 22,988 ஆகும். இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு இழப்பைக் குறித்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 தேசத்துக்கு மகுடம் நுழைவுப் பாதையை சீர் செய்வது தொடர்பாக கெக்கனதுர- ரத்மலே- திக்வெல்ல ஆகிய வீதிகளுக்குப் பயன்படுத்திய எஸ்பீஇசட்ஏ-2276 ஆம் இலக்க ஜெசீபீ இயந்திரத்தின் 2014 ஒக்டோபர் 25 முதல் 29 வரையிலான 5 நாட்களுக்குரிய ஓட்ட அட்டவணைத் தகவல்கள் பொய்யானவை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, அந்த 5 நாட்களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 60,690 அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பாகும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்ட மாகாண வீதி மற்றும் முடிவடையாத வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் (மாத்தறை) ஆகியவற்றின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட சில வீதிகள் தொடர்பாக ஒரு ஏபிசீ கியூப் மீற்றர் ரூபா 2,729 க்கு வழங்கப்படுவதற்கு தனியார் கம்பனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தகாரரால் 2011 நவம்பர் 7 முதல் 9 வரை வழங்கப்பட்ட 275.6 கியூப்களுக்கு 3891 ஆம் இலக்க சிட்டை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய விலைப்பட்டியல் பரீசீலிக்கப்பட்டு, சிபார்சு செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 886,957 ஆகும். எனினும் பின்னர் 1 கியூப்பிற்கு ரூபா 4,000 ஆகச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலுக்கமைய மற்றுமொரு நிறுவனத்திற்கு 2012 மே 25 ஆந் திகதியன்று ரூபா 1,237,376 முறையற்றவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 350,419 ஆகும்.

(எ) தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்டு முன்னாள் தலைவரிடம் கையளிக்கப்பட்ட ரூபா 23,200 பெறுமதியான கையடக்கத் தொலைபேசி அதிகாரசபையை விட்டு அவர் நீங்கியபோது மீள ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6.10 ஒப்பந்த நிர்வாகததில் உள்ள குறைபாடுகள்

---

**தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

---

2014 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களில் கிழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சூரியவெவ பஸ் தரிப்பிட கழிவு நீர் வழிந்தோடும் பாதையைத் திருத்துவதற்கு சூரியவெவ பிரதேச சபைக்கு ரூபா 159,222 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் காணப்படும் வேலை விடயமொன்றின் பிரகாரம் 91 கொங்கிரீட் பாதுகாப்பு உபகரணங்கள் கழிவு நீர்ப்பாதை தயாரிப்பதற்கு திட்டத்தின் படி நீளத்தில் 450 மில்லி மீட்டர் உடன் 10 மில்லி மீட்டர் குறைவான கம்பிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறாக கொங்கிரீட் பாதுகாப்பு உபகரணங்கள் குறித்த நியமங்களுக்கமைய இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) அம்பலாங்கொடை பஸ் தரிப்பட்டுத்தைத் திருத்தம் செய்யவதற்கு அம்பலாங்கொடை நகர சபைக்கு ரூபா 330,614 மதிப்பீட்டுப் பெறுமதியிலான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.1 க்கமைய இதன் பொருட்டு எதுவித எழுத்து மூல உடன்படிக்கையும் செய்யப்படாததுடன், நிறைவேற்றப்படாத வேலைகளுக்கு ரூபா 149,929 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தமையும் நேரடிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) ஊரகஸ்மங்ஹந்திய பஸ் தரிப்பிடத்தைப் பமுதுபார்க்கையில் முதல் தடவை தார் ஊற்றும் போது பெற்றுக்கொண்ட அளவை அறிக்கைகளில் 256.94 சதுர மீட்டர் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு ஒப்பந்தச் சங்கத்திற்கு ரூபா 90,154 வழங்கப்பட்டுமிருந்தது.

(iv) உடுவில பஸ் தரிப்பிடத்தைப் பழுது பார்க்கையில் மதிப்பீட்டில் உள்ள வேலை விடய இலக்கம் 4 இன் கீழ் கால நிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வர்ண மையைச் சுவரில் 2 முறை பூசுவதற்கு 188.92 சதுர அடிக்கு ரூபா 53,464 கொடுப்பனவு செயய்ப்பட்டடிருந்த போதும், ஒரு தடவை மாத்திரமே வர்ணம் பூசப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6.11 தாமதமாகிய செயற்திட்டங்கள்

---

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எல்பிட்டிய வலயக் கல்வி அலுவலகம்

---

2013 ஆம் ஆண்டில் அங்கத்தவர் நிதியேற்பாடாகப் பெறப்பட்ட ரூபா 145,000 மூலம் 3 செயற்திட்டங்களும் 2014 ஆம் ஆண்டில் அங்கத்தவர் நிதியேற்பாடாகப் பெறப்பட்ட ரூபா 139,050 மூலம் 5 செயற்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டின் டிசெம்பர் 3 ஆந் திகதியளவிலும் அச் செயற்திட்டங்கள் முடிவுக்கு வராதிருந்தன.

(ஆ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

முதலமைச்சர், நிதி, மற்றும் திட்டமிடல், சட்டம், மற்றும் ஒழுங்கு, போக்குவரத்து, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினது செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின்படியான செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிலேயே அமுலாக்கப்பட்டு முடிவடைய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், ரூபா 4,301,289 நிதியேற்பாடுடனான 12 செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டின் போது அமுலாக்கப்படாதிருந்தன.

(இ) றுஹுணு சுற்றுலாப் பணியகம்

i. மாகாண குறித்தொதுக்கிய நிதியேற்பாட்டின் கீழ் முன்மொழியப்பட்ட ரூபா 500,000 மதிப்பீட்டுடனான பிரதேச சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

ii. கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதும், அச் செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடப்பட்டதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தகவல் முறைமை ஒன்றைத் தயாரித்தல் | 4,490,000 | 2013.12.23 | 898,000 | இச் செயற்திட்டம் மிகவும் அதிக சிக்கலுடையதும் செலவை ஏற்படுத்துவதுமாக இனங் காணப்பட்டமை |
| அம்பலாங்கொடை வாடி வீட்டை நிர்மாணித்தல் | - | 2012.07.28 | 5,365,072 | போதிய பணம் பெறப்படாமை |

(ஈ) நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

முறையான மதிப்பீடு மற்றும் சரியான திட்டமின்றி நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால், 2014 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2 செயற்திட்டங்களுக்குத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 800,000 நிதியேற்பாட்டில் குறித்த செயற்திட்டம் செயற்படுத்தப்படாது ரூபா 716,502 எஞ்சியிருந்தது.

(உ) சமூக சேவைகள் நிதியம்

தென் மாகாண சபையின் 2002 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சமூக சேவைகள் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், சமூக சேவைகள் நிதியத்தின் மூல நோக்கம் தென் மாகாணத்தில் வசிக்கும், வறிய, யாருமற்ற, ஊனமுள்ள நபர்களுக்கு, நோய்களுக்கு உதவியளித்தல், கல்வி மற்றும் வீடமைப்பு உதவியளித்தல் என்பனவே ஆகும். இந் நோக்கங்களை எய்துவதற்கு மீளாய்வாண்டில் மாகாண சபை அங்கத்தவர் நிதியேற்பாடாக

பெறப்பட்ட தொகை ரூபா 11,741,050 ஆகும். இதில் 22 சதவீதமான ரூபா 2,548,071 க்கான திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமியக் கைத்தொழில், கிராம அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, பொருளாதார மேம்பாடு, சமூக நலனோம்பல் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகார, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சு

---

பத்தேகம விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிலையத்தில் 400 மீட்டர் ஓட்டப் பந்தயச் சுற்று வட்டத்தை நிர்மானிக்கும் வேலை 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதும், 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அவ் வேலை முடிவுறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாட்டில் ரூபா 45,319,030 தென் மாகாண பிரதம செயலாளரது அங்கீகாரத்துடன் பொது வைப்பிற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றஞ் செய்யப்பட்ட நிதியின் 49 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 22,290,235 தொகையானது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்யிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடலும் செயற்பாடும்) அலுவலகம்

---

(i) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தித் திட்டம்

---

- 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம், ஆண்டிற்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழான செலவினம் ரூபா 1,313,801,216 ஆகும். கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2014 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழான செயற்திட்ட முன்னேற்றம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் செலவினம் ரூபா 794,739,379 ஆகும். இதற்கமைய, ரூபா 519,061,837 க்கான செயற்திட்டங்களது தகவல்கள் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டில் புதிய வேலைகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 548,024,856 ஆகும். ஆண்டின் போது இந் நிதியேற்பாட்டின் 46.74 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 256,140,622 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 772,536,591 ஆகும். இதில் ஆண்டின் போது செலவிடப்பட்டது 70 சதவீதமான ரூபா 538,598,757 மாத்திரமே.

- மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஒட்டுமொத்த செயற்திட்டங்களது எண்ணிக்கை 1,198 ஆகும். அவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 1,320,561,447 ஆகும். அதில் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியின் 60 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 794,739,379 மாத்திரமே செலவாகியிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அமுலாக்கப்பட்டிருந்த 660 புதிய செயற்திட்டங்களில் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 531 செயற்திட்டங்கள் அதாவது மொத்தச்

செயற்திட்டங்களில் 80 சதவீதம் மாத்திரமே முடிவடைந்திருந்தது. மேலும், 2014 ஆம் ஆண்டின் போது அமுலாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட 538 நடைபெற்றவாறிருந்த செயற்திட்டங்களில் 2014 டிசெம்பர் 3 ஆந் திகதியளவில் மொத்தச் செயற்திட்டங்களின் 89 சதவீதமான 478 செயற்திட்டங்கள் மாத்திரமே முடிவடைந்திருந்தன.

- மாற்று எரி சக்தியின் கீழ் புதிய வேலைகளுக்கான 6 செயற்திட்டங்களுக்கென அங்கீகரிக்கப்ட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடு ரூபா 6,756,600 ஆகும். இது 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முற்றாகச் செலவிடப்பட்டிருந்த போதும், புதிய செயற்திட்டங்களது முன்னேற்றம் 51 சதவீதத்துக்கும் 75 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாகவே இருந்தது.

(ii) குறித்தொதுக்கிய அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டம்

- தென் மாகாண குறித்தொதுக்கிய அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எண்ணிய புதிய வேலைகளுக்கான நிதியேற்பாடு ரூபா 195,561,359 ஆகும். ஆண்டிற்கான செலவினம் 61.23 சதவீதத்திற்கு ஈடான ரூபா 119,750,184 ஆகும்.
- ஆண்டின்போது அமுல்படுத்த எண்ணிய 302 செயற்திட்டங்களில் 57.62 சதவீதத்திற்கு ஈடான 174 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவடைந்திருந்தன. டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 26.82 சதவீதத்திற்கு ஈடான 81 செயற்திட்டங்களது வேலை ஆரம்பிக்கப்படாதிருந்தது.
- 2014 ஆம் ஆண்டில் புதிய செயற்திட்டங்களுக்கு 5 அமைச்சுக்களுக்கிடையே நிதியேற்பாடு பகிரப்பட்ட, செலவிடப்பட்ட விபரம் வருமாறு.

| | அமைச்சின் பெயர் | நிதியேற்பாடு | திரண்ட செலவினம் | சதவீதம்<br>மொத்த நிதியேற்பாட்டில் | சதவீதம்<br>நிதியேற்பாட்டுக்கு ஒப்பான செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | |
| 1. | முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதார மற்றும் சுதேச மருத்துவம், சுற்றுலாத்துறை மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு | 84,947,696 | 28,080,382 | 43.43 | 33.06 |
| 2. | கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் நடவடிக்கைகள், கிராமியக் கைத்தொழில், மின்சக்தி மற்றும் கிராமிய மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி அமைச்சு | 41,555,060 | 37,312,167 | 21.25 | 89.79 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, பொருளாதார மேம்பாடு, சமூக நலனோம்பல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகார, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, மனிதவலு மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சு | 34,371,820 | 24,249,009 | 17.58 | 70.55 |
| 4. | கமத்தொழில், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம் வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 21,894,783 | 21,627,985 | 11.20 | 98.78 |
| 5. | கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு | 12,792,000 | 8,480,641 | 6.54 | 66.30 |
| | | 195,561,359 | 119,750,184 | 100 | 61.23 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தலைமை அமைச்சின் கீழான நிதியேற்பாட்டில் ரூபா 30,000,000 அல்லது மொத்த நிதியேற்பாட்டில் 35.32 சதவீதம் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அத்தொகையில் ஆண்டின் போது செலவிடப்பட்டது 26.84 சதவீதத்துக்கு ஈடான ரூபா 8,050,579 மாத்திரமே, அவ்வாறே, ஆண்டின் போது அமுலாக்கப்பட்டிருந்த 96 செயற்திட்டங்களில் 16.67 சதவீதத்திற்கு ஈடான 16 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவடைந்திருந்தன. மொத்தச் செயற்திட்டங்களின் 72.92 சதவீததிற்கு ஈடான 70 செயற்திட்டங்களது வேலை 2014 டிசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்படாதிருந்தன.

- நடைபெற்றவாறிருக்கும் 57 செயற்திட்டங்களுக்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 50,663,997 ஒதுக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது அதில் 77.94 சதவீததிற்கு ஈடான 39,484,993 மாத்திரமே செலவாகியிருந்தது. அவ்வாறே, ஆண்டிற்கான மொத்த நிதியேற்பாட்டில் 75.64 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 38,320,838 முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, உள்ளூராட்சி, போக்குவரத்து, சகாதார மற்றும் சுதேசிய மருத்துவம், சுற்றுலாத்துறை மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சிற்கே ஒதுக்கப்பட்டிருந்தது.

- தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமுலாக்கப்பட எண்ணிய அநேக செயற்திட்டங்கள் மாகாண சபையில் நிறுவப்பட்டுள்ள அமைச்சு அல்லது பிறிதொரு நிறுவனம் (திணைக்களம் / அதிகாரசபை ) என்பவற்றின் கீழ் வரும் செயறதிட்டமாகும் என அவதானிக்கப்பட்டது குறித்த விடயம் தொடர்பான விசேட அறிவுடைய மனித வளம் மற்றும் ஏனைய வளங்களுடனான நிறுவனங்கள் இருந்த போதும், குறித்தவிடயம் தொடர்பான போதிய அறிவு அற்ற உத்தியோகத்தர்களுடனும் தேவையான

மனிதவளமற்றதுமான தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையிடம் அவ்வாறான செயற்திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டமையால் பல்வேறு குறைபாடுகள் ஏற்பட இடமுண்டு எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

குறித்தொதுக்கிய அடிப்படையிலான (அங்கத்தவர்க்கான நிதியேற்பாடு) திட்டம்

---

- 2014 ஆம் ஆண்டிற்கான 2022 செயற்திட்டங்களுக்கு ரூபா 182,961,409 நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 172,052,409 அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 94 சதவீதம் பிரதம செயலாளர் செயலகத்தால் விடுவிக்கப்பட்டிருந்ததுது. எனினும், ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த தொகையில் 51 சதவீதத்திற்கு ஈடான ரூபா 88,281,531 மாத்திரமே அதில் செலவாகியிருந்தது. இதற்கமைய, 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு நிறுவனங்களில் எஞ்சியிருந்த தொகை ரூபா 83,770,878 ஆகும்.

- முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட 2022 செயற்திட்டங்களில் 1048 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவடைந்திருந்தன. இது மொத்தச் செயற்திட்டங்களது 51.83 சதவீதம் மாத்திரமே ஆகும். 250 செயற்திட்டங்களது வேலை ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது 12.36 சதவீதம் ஆகும்.

- செலவிற்கான பணம் தேவைப்படும் காலத்தை முன் கூட்டியே கணிப்பிடாது செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன் பணம் விடுவிக்கபப்பட்டதால் ஆண்டின் இறுதியில் பெருமளவு பணம் நிறுவனங்களிற்கிடையே எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, வழங்கப்படும் பணமானது செலவின விடயங்களில் வரவு வைக்கப்பட்டே வழங்கப்படுவதால் செயற்படாது போன செயற்திட்டங்களது தொகையும் ஆண்டிற்கான செலவினமாகக் கணக்கிலிடப்பட்டு அதனை ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டுவதானது முறையற்ற ஒன்றாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இவ்வண்ணம் 2011 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது பல்வேறு செயற்திட்டங்களுக்கு தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்ட தொகையில் ரூபா 31,043,123 குறித்த செயற்திட்டங்களுக்கு 2015 ஜுன் 15 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாது அதிகாரசபையில் தேங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கப்பட்ட ரூபா 31,043,123 க்கான செயற்திட்டங்களில் சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாச் செயற்திட்டங்களாகவிருந்தன. சில செயற்திட்டங்களுக்கு முன்மொழிதல் எதுவும் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. வேறு சில செயற்திட்டங்களது சேவைகள் அரம்பிக்கப்படாத சில செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை அதிகாரசபை பெறாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பான விபரம் கீழேயுள்ள குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

| **விபரம்** | **செயற்திட்டங்களது எண்ணிக்கை** | **தொகை** |
|---|---|---|
| | | **ரூபா** |
| அமுலாக்கப்படாதவை | 20 | 4,959,500 |
| வேலை ஆரம்பிக்கப்படாதவை | 08 | 1,440,000 |
| அமுல்படுத்துவதற்கான தகவல்கள் பெறப்படாதவை | 15 | 2,211,715 |
| செயற்திட்ட அமுலாக்கலின் பின்னர் எஞ்சிய தொகை | 07 | 193,807 |
| வேலைக்கான முன்மொழிதல் பெறப்படாதன | 07 | 1,539,730 |
| | | 10,344,752 |

### 6.12 முறையாகச் சவீகரிக்கப்படாத காணிகள்/ காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ரூபா 6,705,600 மதிப்பீட்டில் சுற்றுலா விடுதி ஒன்றை ஆரம்பிப்பதற்கான செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட போகஹபெலெஸ்ஸ புடவைக் கைத்தொழில் நிலையத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடத்தினது உரித்து கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படாது செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### 6.13 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்/ வெளி நபர்களுக்குரிய வளங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாத்தறை மாவட்டத்தில் உள்ள மஹா வித்தியாலயத்தின் 8 ஆசிரியர்கள் பாடசாலையில் சம்பளத்தைப் பெற்றவாறே வேறு பாடசாலைகளிலும் வலயக் கல்வி அலுவலகங்களிலும் பணியாற்றுவதற்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) தென் மாகாண கல்வி காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்குச் சொந்தமான 2 வாகனங்கள் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபைக்கும் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் வழங்கப்பட்டிருந்தன.

### 6.14 ஆளணி நிர்வாகம்

#### 6.14.1 தென் மாகாண கல்விச் சேவை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண கல்விச் சேவைக்குரிய கல்விசார் மற்றம் கல்விசாரா ஆளணியை கணக்கிணக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால், 1050 தென் மாகாண பாடசாலைகளில் 516 பாடசாலைகளில் 2224 ஆசிரியர்கள் மேலதிகமாகவும் 412 பாடசாலைகளில் 1842 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதும் தென்பட்டது. காலி வலய அலுவலகத்துக்குரிய பாடசாலைகள்

ஒவ்வொன்றினதும் அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் அவ் வலயம் தவிர்ந்த ஏனைய வலயங்களது அங்கீகரிக்கப்பட்ட 576 கல்விசாரா பாடசாலைகளில் 178 பாடசாலைகளில் 288 ஊழியர்கள் மேலதிகமும் 277 பாடசாலைகளில் 548 உழியர்களிற்கு பற்றறாகுறையும் நிலவியது.

(ஆ) தென் மாகாண கல்விச் சேவையில் வருடாந்த இட மாற்றம் முறைப்படி மேற்கொள்ளப்படாது உத்தியோகத்தர்களது வேண்டுகோளுக்கேற்ப பெருமளவில் தற்காலிகமாகப் பணியிலமர்த்தப்படுவது நடைபெற்றவாறிருந்தது. இதன் மூலம் நிரந்தர சேவை இடங்களில் உத்தியோகத்தர்களினது பற்றாக்குறையும் பணியிலமர்த்தப்பட்ட இடங்களில் மேலதிகமும் நிருபணமாவதுடன் இந்நிலைமையானது தென் மாகாண கல்விச் சேவையின் திறம்பட அபிவிருத்திக்குப் பாதகம் விளைவிப்பதாகவும் அவதானிக்கப்பட்டது.

(இ) தென் மாகாணக் கல்விச் சேவைக்குரிய கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணியில் 24 பேர் 2014 ஆம் ஆண்டின் போது 1560 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையில் சென்றிருந்தனர். இந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் வழக்கப்படி சம்பளமற்று விடுமுறையைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தென் மாகாண கல்விச் சேவையின் பல்வேறு பதவிகளுக்கும் ஆட்சேர்க்கப்பட்ட 12 பேர் தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், மற்றும் தகவல் அமைச்சுக்குக் விடுவிக்கப்பட்டிருந்தனர். தென் மாகாண கல்வித் திணைக்களம் 2014 ஆம் ஆண்டின் போது அவர்களுக்குச் சம்பளமாக வழங்கியிருந்த தொகை ரூபா 2,665,624 ஆகும்.

(உ) மாத்தறை மாவட்ட மஹா வித்தியாலய உதவி ஆசிரியர் ஒருவர் 2014 ஏப்ரல் 21 தொடக்கம் தென் மாகாண கல்வி அமைச்சில் பணியிலிமர்த்தப்பட்டு 2014 ஆம் ஆண்டின்போது அவருக்கு ரூபா 198,442 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண கல்விச் சேவையின் 3 உத்தியோகத்தர்கள் தென் மாகாண முதலமைச்சரது பதவியணிக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். தென் மாகாண கல்வித் திணைக்களத்தால் அவர்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,288,056 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) தென் மாகாண கல்விச் சேவைக்குரிய 4 ஆசிரியர்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 1,447,800 சம்பளமாக தென் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதற்குப் புறம்பாக, தென் மாகாண கல்விச் சேவைக்குரிய 18 ஆசிரியர்கள் தேசிய மாணவர் படையணி / பாதுகாப்புப் படைப்பிரிவுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். தென் மாகாண கல்வித் திணைக்களம் 2014 ஆம் ஆண்டின் போது அவர்களுக்குச் சம்பளமாக வழங்கியிருந்த தொகை ரூபா 6,285,386 ஆகும்.

(ஏ) அகுறஸ்ஸ வலயக்கல்வி அலுவலகத்தால் 2014 ஆகஸ்ட் முதல் குறிப்பிட்ட ஒருவருக்குச் சம்பளம் வழங்கியிருந்தபோதும், அவர் நியமிக்கப்பட்ட திகதி, பதவி, நியமிக்கப்பட்ட நிறுவனம், பணியிலமர்த்தப்பட்ட திகதி, பணியிலமர்த்தப்பட்ட நிறுவனத்தில் அவர் வேலைக்குச் சமூகமளித்தல், செல்லுதல் ஆற்றிய பணி போன்ற தகவல்கள் தெரியவில்லை என 2015 செப்டம்பர் 04 ஆந் திகதியன்று வலயக் கல்விப் பணிப்பாளர் கணக்காய்விற்கு

அறிவித்திருந்தார். 2014 ஆம் ஆண்டின்போது அவருக்கு ரூபா 135,210 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது தெரிய வந்தது.

### 6.14.2 தென் மாகாண சுகாதார சேவை

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களது எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1069 | 766 | 303 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 240 | 172 | 68 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 4681 | 3750 | 931 | - |
| ஆரம்ப மட்டம் | 3068 | 2421 | 862 | 215 |
| மொத்தம் | 9058 | 7109 | 2164 | 215 |

(i) மேற்படி வெற்றிடங்களுள் 22 வெற்றிடங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நிலவியதுடன் அதில் 12 பதவிகளுக்கான வெற்றிடங்கள் உயர் மட்டத்திலானவை எனவும் அவதானிக்கப்பட்டது.

(ii) முறையான அங்கீகாரமின்றி ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த 215 ஊழியர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரித்திருக்கவில்லை.

### 7.2 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.3 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் 24 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடப்படக் கூடிய பெறுமதி ரூபா 244,668,464 ஆகவுமிருந்தது.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாகாண அரசாங்க கணக்குக் குழுவால் 2014 டிசெம்பர் 11 மற்றும் 12, 2015 ஜனவரி 26, மற்றும் ஏப்ரல் 27 ஆந் திகதிகளில் விடுவிக்கப்பட்ட கட்டளைகள் 8 ஆகும். இவை 2015 ஆகஸ்ட் 31 வரையிலும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு மாகாண அரசாங்கக் கணக்குக் குழுவால் 2015 மார்ச் 23 மற்றும் ஏப்ரல் 07 ஆந் திகதிகளில் விடுவிக்கப்பட்ட கட்டளைகள் 9 ஆகும். இவை 2015 ஆகஸ்ட் 31 வரை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணகாய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தென் மாகாண சபை நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதம செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) ஊழியர் நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட அமுலாக்கல்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) வாகனப் பாவனை
(எ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஏ) நிதிய முகாமைத்துவம்